**கவனிக்க.-** *2010.08.27 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி I : தொகுதி II (அ) மற்றும் பகுதி III ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1670 - 2010 සැප්තැම්බර් මස 03 වැනි සිකුරාදා - 2010.09.03

*1670 ஆம் இலக்கம் - 2010 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


# பகுதி I : தொகுதி (I) - பொது

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் |
|---|---|
| சனாதிபதியின் பிரகடனங்களும் பிறவும் | - |
| சனாதிபதியின் நியமனங்களும் பிறவும் | 1620 |
| அமைச்சரவையின் நியமனங்களும் பிறவும் | 1620 |
| அரசாங்க ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் | - |
| நீதிச்சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | 1620 |
| பதிவாளர் நியமனங்களும் பிறவும் | - |
| அரசாங்க அறிவித்தல்கள் | 1623 |
| விலைக் கட்டளைகள் | - |
| இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள் | - |
| இலங்கை அரசாங்க கணக்கு விபரங்கள் | - |
| வரவு செலவுத் திரட்டுக்கள் | - |
| அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள் | 1623 |
| மாலுமிகளுக்கு அறிவித்தல்கள் | - |
| மதுவரிக் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

## முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தில், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் அறிவித்தல் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை - நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கான விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2010, செத்தெம்பர் மாதம் 09 ஆந் திகதி வியாழக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2010, ஓகத்து மாதம் 27 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**லக்ஷ்மன் குணவர்தன,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2010 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

# சனாதிபதியின் நியமனங்களும் பிறவும்

டீஆர்எப்/21/ஆர்ஈசீரீ/3092.

**இலங்கைத் தரைப்படை - நிரந்தரப் படை**

அதியுத்தமராம் சனாபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட அபகீர்த்தியாக சேவையிலிருந்து அகற்றுதல்

இலங்கை தரைப்படையின் நிரந்தர படையின் பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர் 2010, பெப்புருவரி 22 ஆந் திகதியிலிருந்து அபகீர்த்தியாக சேவையிலிருந்து அகற்றுதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது:-

இரண்டாம் லெப்டினனட் ரணவீர ராலலாகே சந்தன கித்சிரி ரணவீர, இப்ப (உ/64348)

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு அமைச்சு.

கொழும்பு,
2010, மே 10.

9-72

# அமைச்சரவையின் நியமனங்களும் பிறவும்

2010 இன் இல. 115

அமைச்சரவையினால் பின்வரும் நியமனம் செய்யப்பட்டுள்ளது:

இலங்கை நிர்வாக சேவையின் I ஆம் வகுப்பைச் சேர்ந்த திரு. வஜிர கம்புறுகமுவ அவர்கள் 2009, ஒற்றோபர் மாதம் 21 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு மறுகட்டளை பிறப்பிக்கும் வரை பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சின் சிரேட்ட உதவிச் செயலாளராக.

9-78

2010 இன் இல. 116

அமைச்சரவையினால் பின்வரும் நியமனம் செய்யப்பட்டுள்ளது:

இலங்கை நிர்வாக சேவையின் I ஆம் வகுப்பைச் சேர்ந்த திரு. ஏ. அப்துல் மஜீட் அவர்கள் 2010 யூன் மாதம் 10 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு மறுகட்டளை பிறப்பிக்கும் வரை உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சின் பதில் மேலதிகச் செயலாளராக.

9-77

# மற்றைய நியமனங்களும் பிறவும்

2010 இன் இல. 117

இலங்கை நிருவாக சேவையில் அமைச்சரவை நியமனங்கள்

1. இலங்கை நிருவாக சேவை வகுப்பு I ஐச் சேர்ந்த அலுவலராகிய திருவாளர் எம். எம். எஸ். எஸ். பி. யாலேகம அவர்கள் 2010.06.23 ஆந் திகதி முதல் மறு அறிவித்தல் வரை போக்குவரத்து அமைச்சில் சிரேஷ்ட உதவிச் செயலாளராக.

2. இலங்கை நிருவாக சேவை வகுப்பு I ஐச் சேர்ந்த அலுவலராகிய திருமதி அருணி எஸ். ரணசிங்ஹ அவர்கள் 2009.12.08 ஆந் திகதி முதல் மறு அறிவித்தல் வரை துறைமுக விமானப்போக்கு வரத்து அமைச்சில் உதவிச் செயலாளராக.

3. இலங்கை நிருவாக சேவை வகுப்பு I ஐச் சேர்ந்த அலுவலராகிய திருவாளர் எல். கே. பேமரத்ன அவர்கள் 2010.07.12 ஆந் திகதி முதல் மறு அறிவித்தல் வரை காணி உரித்து நிர்ணய திணைக்களத்தில் காணி உரித்து நிர்ணய ஆணையாளராக (பிம்சவிய).

4. இலங்கை நிருவாக சேவை வகுப்பு III ஐச் சேர்ந்த அலுவலராகிய திருமதி எம். யூ. ஜ. அழகக்கோன் அவர்கள் 2010.04.23 ஆந் திகதி முதல் மறு அறிவித்தல் வரை குடிவரவு, குடியகல்வு திணைக்களத்தில் உதவிக் கட்டுப்பாட்டாளராக.

5. இலங்கை நிருவாக சேவை வகுப்பு III ஐச் சேர்ந்த அலுவலராகிய திருவாளர் விமல் அபேவர்ண அவர்கள் 2010.06.03 ஆந் திகதி முதல் மறு அறிவித்தல் வரை சிறுவர் நல மேம்பாடு மகளிர் விவகார அமைச்சின் மகளிர் பணியகத்தில் உதவிப் பணிப்பாளராக.

6. இலங்கை நிருவாக சேவை வகுப்பு III ஐச் சேர்ந்த அலுவலராகிய திருவாளர் விமல் சிசிர குமார அவர்கள் 2010.07.03 ஆந் திகதி முதல் மறு அறிவித்தல் வரை தென்மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவில் உதவிச்செயலாளராக.

டீ. திசாநாயக்க.
செயலாளர்,
பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 7.
2010, ஒகத்து 12.

9-67

*2010 இன் இல. 118*

*1978 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க நீதித்துறைச் சட்டத்தின் 45 (2) ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு நீதி அமைச்சர் அதாவுத செனெவிரத்ன ஆகிய யான்,*

1. திருமதி கொஸ்கொல்லே கெதர இந்திராணி மெனிகே அவர்களை, தீவு முழுவதுக்குமான ஒரு சமாதான நீதவானாகவும்,
2. திருமதி கொஸ்கொல்லே கெதர குணரத்ன மெனிகே அவர்களை, தீவு முழுவதுக்குமான ஒரு சமாதான நீதவானாகவும்,
3. திரு. உடகம விதான ரால்லாகே ஜயவர்தன அவர்களை, தீவு முழுவதுக்குமான ஒரு சமாதான நீதவானாகவும்,
4. திருமதி ஹேனக ரால்லாகே நர்மதா கீதானி எகொடகெதர அவர்களை, தீவு முழுவதுக்குமான ஒரு சமாதான நீதவானாகவும்,
5. திரு. எதாஉட ரால்லாகே சேனாநாயக்க பண்டா அவர்களை, தீவு முழுவதுக்குமான ஒரு சமாதான நீதவானாகவும்,
6. திரு. விதானகே சிசில் சந்திரசிறி பெரேரா அவர்களை, தீவு முழுவதுக்குமான ஒரு சமாதான நீதவானாகவும்,
7. திரு. ஜயசிங்ககே தொன் நந்திக ஜயசிங்க அவர்களை, தீவு முழுவதுக்குமான ஒரு சமாதான நீதவானாகவும்,
8. திரு. எலபாதகே புண்ணியவர்தன அவர்களை, தீவு முழுவதுக்குமான ஒரு சமாதான நீதவானாகவும்,
9. திரு. பாரோன் மாரசிங்ககே ரத்நாயக்க அவர்களை, தீவு முழுவதுக்குமான ஒரு சமாதான நீதவானாகவும்,
10. திரு. சூரியகொட கெதர ஜயரத்ன அவர்களை, தீவு முழுவதுக்குமான ஒரு சமாதான நீதவானாகவும்,
11. திரு. சந்தனம் அங்கமுத்து அவர்களை, தீவு முழுவதுக்குமான ஒரு சமாதான நீதவானாகவும்,
12. திரு. கீகியனகே நிமல் சில்வா அவர்களை, தீவு முழுவதுக்குமான ஒரு சமாதான நீதவானாகவும்,
13. திரு. தானாந்தர விதானகே சந்தமாலி அவர்களை, தீவு முழுவதுக்குமான ஒரு சமாதான நீதவானாகவும்,
14. திரு. சமரகோன் ராலாகே யசபால அவர்களை, தீவு முழுவதுக்குமான ஒரு சமாதான நீதவானாகவும்,
15. திரு. நந்தசிறி கெகுலந்தல அவர்களை, தீவு முழுவதுக்குமான ஒரு சமாதான நீதவானாகவும்,
16. திரு. ரணவக ஆரச்சிகே தொன் ஜயசிங்க அவர்களை, தீவு முழுவதுக்குமான ஒரு சமாதான நீதவானாகவும்,
17. திரு. ஹேரத் ராலாகே தர்மசேன அவர்களை, தீவு முழுவதுக்குமான ஒரு சமாதான நீதவானாகவும்,
18. திருமதி கல்கொல கங்கானம்கே தயானி அவர்களை, தீவு முழுவதுக்குமான ஒரு சமாதான நீதவானாகவும்,
19. திருமதி தேரென்கல லியனகே லதா அவர்களை, காலி நீதி நிருவாக வலயத்துக்கான ஒரு சமாதான நீதவானாகவும்,
20. வண. மகநுவர பேமரதன தேரோ அவர்களை, காலி நீதி நிருவாக வலயத்துக்கான ஒரு சமாதான நீதவானாகவும்,
21. திருமதி போபே கமகே ஞானவதி அவர்களை, காலி நீதி நிருவாக வலயத்துக்கான ஒரு சமாதான நீதவானாகவும்,
22. திருமதி நபதவ விதானகே சோமாவதி அவர்களை, காலி நீதி நிருவாக வலயத்துக்கான ஒரு சமாதான நீதவானாகவும்,
23. திருமதி ரீ. பீ. வீ. சுசிலா ரஞ்ஜனி அவர்களை, காலி நீதி நிருவாக வலயத்துக்கான ஒரு சமாதான நீதவானாகவும்,
24. திருமதி ஹேனேகம முதுகுமாரண காந்தி பிரியன்கா அவர்களை, காலி நீதி நிருவாக வலயத்துக்கான ஒரு சமாதான நீதவானாகவும்,
25. வண. நாகியாதெனி ஞானுத்தர தேரோ அவர்களை, காலி நீதி நிருவாக வலயத்துக்கான ஒரு சமாதான நீதவானாகவும்,
26. திரு. வினாசி மேஸ்திரிகே விஜித அவர்களை, காலி நீதி நிருவாக வலயத்துக்கான ஒரு சமாதான நீதவானாகவும்,
27. திருமதி ரேணுகா விஜேவிக்ரம குணசேகர அவர்களை, காலி நீதி நிருவாக வலயத்துக்கான ஒரு சமாதான நீதவானாகவும்,
28. திருமதி தேமுனி ரீட்டா லக்ஷ்மி த சொயிஸா அவர்களை, காலி நீதி நிருவாக வலயத்துக்கான ஒரு சமாதான நீதவானாகவும்,
29. திருமதி சிறிமாவதி பிட்டிதூவ கமகே அவர்களை, காலி நீதி நிருவாக வலயத்துக்கான ஒரு சமாதான நீதவானாகவும்,
30. திருமதி கனஹல கமகே சந்திரா லக்ஷ்மி அவர்களை, காலி நீதி நிருவாக வலயத்துக்கான ஒரு சமாதான நீதவானாகவும்,
31. வண. ஈதண்டுகித்த அனோமதஸ்லி தேரோ அவர்களை, காலி நீதி நிருவாக வலயத்துக்கான ஒரு சமாதான நீதவானாகவும்,
32. வண. பமுணுகம ரேவத தேரோ அவர்களை, காலி நீதி நிருவாக வலயத்துக்கான ஒரு சமாதான நீதவானாகவும்,
33. திருமதி மாகாவிட்ட கமகே சீலவதி மறுபெயர் மகாவிட்ட கமகே சுசீலா அவர்களை, காலி நீதி நிருவாக வலயத்துக்கான ஒரு சமாதான நீதவானாகவும்,
34. திரு. தெலிகட பல்லியகுருகே சோமசீலி அல்விஸ் அவர்களை, காலி நீதி நிருவாக வலயத்துக்கான ஒரு சமாதான நீதவானாகவும்,
35. திரு. இந்துனில் எதிரிசிங்க அவர்களை, காலி நீதி நிருவாக வலயத்துக்கான ஒரு சமாதான நீதவானாகவும்,
36. திரு. முகந்திரம் பியசீலி குணசேக்கர சூரியஆரச்சி அவர்களை, காலி நீதி நிருவாக வலயத்துக்கான ஒரு சமாதான நீதவானாகவும்,
37. திருமதி வடுவத்தெ கம்கானம்கே டெல்சி விமல் முதுகுமாரி அவர்களை, காலி நீதி நிருவாக வலயத்துக்கான ஒரு சமாதான நீதவானாகவும்,
38. வண. போதுடுவே ஞானவிசுத்தி தேரோ அவர்களை, காலி நீதி நிருவாக வலயத்துக்கான ஒரு சமாதான நீதவானாகவும்,
39. வண. கனுமுல்தெனியே சந்தவிமல தேரோ அவர்களை, காலி நீதி நிருவாக வலயத்துக்கான ஒரு சமாதான நீதவானாகவும்,
40. திரு. நந்த பெரேரா விக்ரமசிங்க அவர்களை, காலி நீதி நிருவாக வலயத்துக்கான ஒரு சமாதான நீதவானாகவும்,
41. வண. நாஒடுள்ளே நந்த ரதன தேரோ அவர்களை, காலி நீதி நிருவாக வலயத்துக்கான ஒரு சமாதான நீதவானாகவும்,
42. வண. தெல்லம்புரே சரண தேரோ அவர்களை, காலி நீதி நிருவாக வலயத்துக்கான ஒரு சமாதான நீதவானாகவும்,
43. வண. மகரம்ப சோமரதன தேரோ அவர்களை, காலி நீதி நிருவாக வலயத்துக்கான ஒரு சமாதான நீதவானாகவும்,
44. திரு. பொல்வத்த கால்லகே புஞ்ஞதீர அவர்களை, காலி நீதி நிருவாக வலயத்துக்கான ஒரு சமாதான நீதவானாகவும்,
45. திரு. நானாயக்கார வெல்லாலகே சந்திராணி அவர்களை, காலி நீதி நிருவாக வலயத்துக்கான ஒரு சமாதான நீதவானாகவும்,
46. வண. ஹல்லல ரதனசார தேரோ அவர்களை, காலி நீதி நிருவாக வலயத்துக்கான ஒரு சமாதான நீதவானாகவும்,
47. திரு. அகங்கம வலவகே ஜயந்த அவர்களை, காலி நீதி நிருவாக வலயத்துக்கான ஒரு சமாதான நீதவானாகவும்,
48. திரு. சண்முகம் ஐங்கரன் அவர்களை, மட்டக்களப்பு நீதி நிருவாக வலயத்துக்கான ஒரு சமாதான நீதவானாகவும்,
49. திருமதி நவநீதபாரதி பிரபாகரன் அவர்களை, பதுளை நீதி நிருவாக வலயத்துக்கான ஒரு சமாதான நீதவானாகவும்,
50. திரு. கொஸ்கிஞ்ஞ வடுகே ஆனந்த ரத்னவீர அவர்களை, தீவு முழுவதுக்குமான ஒரு சமாதான நீதவானாகவும்,

51. திரு. ஹிமிதும் கபுகே வசந்த குமார அவர்களை, இரத்தினபுரி நீதி நிருவாக வலயத்துக்கான ஒரு சமாதான நீதவானாகவும்,
52. திரு. மஹேஷிகா தில்றுக்ஷி விதானகமகே அவர்களை, இரத்தினபுரி நீதி நிருவாக வலயத்துக்கான ஒரு சமாதான நீதவானாகவும்,
53. திரு. கிறிஸ்தோகுகே நிஷாந்த உதயசிறி அவர்களை, நீர்கொழும்பு நீதி நிருவாக வலயத்துக்கான ஒரு சமாதான நீதவானாகவும்,
54. திரு. மதுராவலகே ஜவன் அப்புஹாமி அவர்களை, நீர்கொழும்பு நீதி நிருவாக வலயத்துக்கான ஒரு சமாதான நீதவானாகவும்,
55. திரு. அம்புரோசு கங்கானமலாகே அமித்த சுகத் த சில்வா அவர்களை, தீவு முழுவதுக்குமான ஒரு சமாதான நீதவானாகவும்,
56. திரு. சமரதிஸ்ஸ விதானகே அவர்களை, தீவு முழுவதுக்குமான ஒரு சமாதான நீதவானாகவும்,
57. திருமதி மாக்கிரட் ராஜமணி ராஜேந்திரம் அவர்களை, கொழும்பு நீதி நிருவாக வலயத்துக்கான ஒரு சமாதான நீதவானாகவும்,
58. திரு. அகலா ஹந்தி லெனட் பியரத்ன அவர்களை, தீவு முழுவதுக்குமான ஒரு சமாதான நீதவானாகவும்,
59. திரு. தர்மரத்ன ஹேரத் அவர்களை, தீவு முழுவதுக்குமான ஒரு சமாதான நீதவானாகவும்,
60. திரு. இராசையா கலைச்செல்வன் அவர்களை, தீவு முழுவதுக்குமான ஒரு சமாதான நீதவானாகவும்,
61. திரு. தொடன்கஸ்தென்னே கெதர விமலரத்ன அவர்களை, கண்டி நீதி நிருவாக வலயத்துக்கான ஒரு சமாதான நீதவானாகவும்,
62. திரு. மைகல் அன்பழகன் அவர்களை, தீவு முழுவதுக்குமான ஒரு சமாதான நீதவானாகவும்,
63. திரு. ஓகந்த வத்தகே தர்மதாச அவர்களை, அவிசாவளை நீதி நிருவாக வலயத்துக்கான ஒரு சமாதான நீதவானாகவும்,
64. திரு. மிரிஹான கங்கானம்கே தர்மவர்தன அவர்களை, களுத்துறை நீதி நிருவாக வலயத்துக்கான ஒரு சமாதான நீதவானாகவும்,
65. திரு. அளுத்கே தொன் சிறிபால அவர்களை, தீவு முழுவதுக்குமான ஒரு சமாதான நீதவானாகவும்,
66. திரு. சமரகோன் முதியன்சேலாகே வத்தேகெதர திலகரத்ன பண்டா அவர்களை, கண்டி நீதி நிருவாக வலயத்துக்கான ஒரு சமாதான நீதவானாகவும்,
67. திருமதி கலாமாலனி ராஜரத்னம் அவர்களை, தீவு முழுவதுக்குமான ஒரு சமாதான நீதவானாகவும்,
68. திரு. கந்படகே தொன் புண்ணியசிறி விஜேநாயக்க அவர்களை, கொழும்பு நீதி நிருவாக வலயத்துக்கான ஒரு சமாதான நீதவானாகவும்,
69. வண. மெடியாவே பியரதன தேரோ அவர்களை, தீவு முழுவதுக்குமான ஒரு சமாதான நீதவானாகவும்,
70. திரு. கோபாலபிள்ளை குமாரபிள்ளை சந்திரகுமாரன் அவர்களை, கண்டி நீதி நிருவாக வலயத்துக்கான ஒரு சமாதான நீதவானாகவும்,
71. திரு. மகிந்த குமார பண்டார நவநெலிய அவர்களை, கண்டி நீதி நிருவாக வலயத்துக்கான ஒரு சமாதான நீதவானாகவும்,
72. திரு. கிரிஹதன் கந்தலாகே தர்மதாச எல்லாவல அவர்களை, தீவு முழுவதுக்குமான ஒரு சமாதான நீதவானாகவும்,
73. வண. கெகிரிஒபட கல்யாணசிறி தேரோ அவர்களை, ஹம்பாந்தோட்டை நீதி நிருவாக வலயத்துக்கான ஒரு சமாதான நீதவானாகவும்,
74. திரு. ஹேவா எந்தயத்ததெஹிகே சோமவன்த அவர்களை, மாத்தறை நீதி நிருவாக வலயத்துக்கான ஒரு சமாதான நீதவானாகவும்,
75. திரு. பரணமானகே சந்திரசிறி அவர்களை, மாத்தறை நீதி நிருவாக வலயத்துக்கான ஒரு சமாதான நீதவானாகவும்,
76. திரு. தல்வத்தே ரத்நாயக்க தல்வத்த அவர்களை, தீவு முழுவதுக்குமான ஒரு சமாதான நீதவானாகவும்,
77. திரு. ஹேவா பேடிகே பேமதாச அவர்களை, கேகாலை நீதி நிருவாக வலயத்துக்கான ஒரு சமாதான நீதவானாகவும்,
78. திரு. நிமல் ஹந்தபான்கொட அவர்களை, தீவு முழுவதுக்குமான ஒரு சமாதான நீதவானாகவும்,
79. திரு. சுதுவெலி கொன்தகே அஜித் குசும்சிறி அவர்களை, தீவு முழுவதுக்குமான ஒரு சமாதான நீதவானாகவும்,
80. திரு. சிவகுரு கணேசன் அவர்களை, கொழும்பு நீதி நிருவாக வலயத்துக்கான ஒரு சமாதான நீதவானாகவும்,
81. திருமதி ஹெல்பிட்டராலலாகே சாந்தி குமாரி விஜேவர்தன அவர்களை, கம்பஹா நீதி நிருவாக வலயத்துக்கான ஒரு சமாதான நீதவானாகவும்,
82. திரு. கருணாகரன் ஞானபாஸ்கரன் அவர்களை, மட்டக்களப்பு நீதி நிருவாக வலயத்துக்கான ஒரு சமாதான நீதவானாகவும்,
83. திரு. ஹென்தஹேவா சமிந்த துஷார அவர்களை, பலப்பிட்டி நீதி நிருவாக வலயத்துக்கான ஒரு சமாதான நீதவானாகவும்,
84. திரு. ஹணரசிங்க ஆரச்சிகே தொன் சுரேஷ் தர்ஷன ஹணரசிங்க அவர்களை, தீவு முழுவதுக்குமான ஒரு சமாதான நீதவானாகவும்,
85. திரு. கோரளே கெதர நாமினி பிரியந்த கருணாரத்ன அவர்களை, கேகாலை நீதி நிருவாக வலயத்துக்கான ஒரு சமாதான நீதவானாகவும்,
86. திரு. கோனாபீனுவல ஹரண மஹிலால் த சில்வா அவர்களை, தீவு முழுவதுக்குமான ஒரு சமாதான நீதவானாகவும்,
87. திரு. அஜித் மனிவெல்வடு அவர்களை, தீவு முழுவதுக்குமான ஒரு சமாதான நீதவானாகவும்,
88. திரு. உபாசக ராலலாகே கெதர குணதிலக்க பண்டா அவர்களை, கண்டி நீதி நிருவாக வலயத்துக்கான ஒரு சமாதான நீதவானாகவும்,
89. திரு. ரத்நாயக்க முதியன்சேலாகே புஞ்சிபண்டா ரத்நாயக்க அவர்களை, தீவு முழுவதுக்குமான ஒரு சமாதான நீதவானாகவும்,
90. திரு. ஹவுபெ என்டேர ஆரச்சிகே குமாரதாச அவர்களை, தீவு முழுவதுக்குமான ஒரு சமாதான நீதவானாகவும்,
91. திரு. சாஹுல் ஹமீட் மொகமட் அஸ்ரொப் முபாரக் அவர்களை, புத்தளம் நீதி நிருவாக வலயத்துக்கான ஒரு சமாதான நீதவானாகவும்,
92. திருமதி மொஹொமட் மொஹிதீன் சித்தி சரீபா அவர்களை, பதுளை நீதி நிருவாக வலயத்துக்கான ஒரு சமாதான நீதவானாகவும்,
93. திருமதி மானெல் சந்திரகாந்தி ரூபசிங்க கொட்டுவேகொட அவர்களை, தீவு முழுவதுக்குமான ஒரு சமாதான நீதவானாகவும்,
94. திருமதி மகமரக்கலகே ஒலீவியா மானெல் கலபதி அவர்களை, தீவு முழுவதுக்குமான ஒரு சமாதான நீதவானாகவும்,
95. திரு. மெனுவெல் அனில்சாந்த அவர்களை, தீவு முழுவதுக்குமான ஒரு சமாதான நீதவானாகவும்,

96. திரு. லியன் பதிரன்னெஹெலாகே சமந்த வஜிர குமார அவர்களை, கம்பஹா நீதி நிருவாக வலயத்துக்கான ஒரு சமாதான நீதவானாகவும்,

97. வண. வெலிவிட்டியே தம்மாலோக்க தேரோ அவர்களை, தீவு முழுவதுக்குமான ஒரு சமாதான நீதவானாகவும்,

98. திரு. இவுடுகொட கம்எதிகே தொன் சுனில் ஜயதுங்க அவர்களை, அவிசாவளை நீதி நிருவாக வலயத்துக்கான ஒரு சமாதான நீதவானாகவும்,

99. திரு. ஆண்டிபுதுகே அன்ரனி பெர்னாந்து அவர்களை, நீர்கொழும்பு நீதி நிருவாக வலயத்துக்கான ஒரு சமாதான நீதவானாகவும்,

100. திரு. நிஹால் கருணாநாயக்க அவர்களை, மாத்தறை நீதி நிருவாக வலயத்துக்கான ஒரு சமாதான நீதவானாகவும்,

101. திரு. ஆனந்த ஜயரத்ன அதிகாரி அவர்களை, தீவு முழுவதுக்குமான ஒரு சமாதான நீதவானாகவும்,

102. திரு. மிரிஹான கங்கானம்கே தர்மவர்தன அவர்களை, களுத்துறை நீதி நிருவாக வலயத்துக்கான ஒரு சமாதான நீதவானாகவும்,

103. திரு. வீரரத்ன மாதற மகவிதான பட்டபெந்திகே அமரவங்ச அவர்களை, கண்டி நீதி நிருவாக வலயத்துக்கான ஒரு சமாதான நீதவானாகவும்,

104. திரு. பஸ்நாயக்க முதியன்சேலாகே மல்லிகா தர்மரத்ன அவர்களை, தீவு முழுவதுக்குமான ஒரு சமாதான நீதவானாகவும்,

105. திரு. துரைசாமி சண்முகம் அவர்களை, கண்டி நீதி நிருவாக வலயத்துக்கான ஒரு சமாதான நீதவானாகவும்,

106. திருமதி ஹலங்கொட வலவ்வே அமராவதீ ஹலங்கொட அவர்களை, கண்டி நீதி நிருவாக வலயத்துக்கான ஒரு சமாதான நீதவானாகவும்,

107. திரு. ரெங்கன் செல்லையா முத்துக்குமார் அவர்களை, தீவு முழுவதுக்குமான ஒரு சமாதான நீதவானாகவும்,

108. திரு. இலேபெரும ஆரச்சிகே தோன ரஞ்ஜனி லீலாவதி அவர்களை, தீவு முழுவதுக்குமான ஒரு சமாதான நீதவானாகவும்,

109. திரு. கந்தகே சரத் ஜயசிங்க அவர்களை, காலி நீதி நிருவாக வலயத்துக்கான ஒரு சமாதான நீதவானாகவும்,

110. திரு. அலாவத்த கங்கானம்கே ஜயகுமார அவர்களை, தீவு முழுவதுக்குமான ஒரு சமாதான நீதவானாகவும்,

111. திரு. சின்னத்தம்பி விவேகானந்தன் அவர்களை, அம்பாறை நீதி நிருவாக வலயத்துக்கான ஒரு சமாதான நீதவானாகவும்,

112. திரு. தாவித் வீரகோன்கே விஜேரத்ன அவர்களை, தீவு முழுவதுக்குமான ஒரு சமாதான நீதவானாகவும்,

113. திரு. மொகமட் இலியாஸ் மொகமட் ரியாஸ் அவர்களை, தீவு முழுவதுக்குமான ஒரு சமாதான நீதவானாகவும்,

114. திரு. அலி இப்னு முகம்மது நஸார் அவர்களை, திருகோணமலை நீதி நிருவாக வலயத்துக்கான ஒரு சமாதான நீதவானாகவும்,

115. திரு. ரத்நாயக்க ஆரச்சில்லாகே பிரேமரத்ன அவர்களை, இரத்தினபுரி நீதி நிருவாக வலயத்துக்கான ஒரு சமாதான நீதவானாகவும்,

நியமிக்கின்றேன்.

அதாவுத செனெவிரத்ன,
நீதி அமைச்சர்.

நீதி அமைச்சு,
2010.08.16.

9-76

# அரசாங்க அறிவித்தல்கள்

**புனித யாத்திரைகள் கட்டளைச் சட்டம்**
**(அத்தியாயம் 175)**

கொத்மலை - மொரப்பே ஸ்ரீ கதிர்காம தேவாலய எசல உற்சவம் - 2010

மேற்குறிப்பிட்ட உற்சவம் 2010, செத்தெம்பர் மாதம் 08 ஆந் திகதி முதல் 2010, செத்தெம்பர் மாதம் 23 ஆந் திகதி வரை நடைபெறும் என்பதை மக்கள் அறிந்து கொள்வதற்காக இத்தால் அறிவிக்கிறேன்.

புனித யாத்திரைகள் ஆணைச் சட்டத்தின் நியதிகளுக்கமைய கீழ் விபரம் குறிப்பிடும் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் கட்டளைகள் உற்சவ காலத்துக்குள் செல்லுபடியாகும் என்பதை மக்கள் அவதானத்திற்கு உட்படுத்துகின்றேன்.

2008, ஒகத்து மாதம் 22 ஆந் திகதியின் 1564 ஆம் இலக்க வர்த்தமானி.

எச். எம். எம். யூ. பீ. ஹேரத்,
பிரதேச செயலாளர்,
கொத்மலை.

பிரதேச செயலகம்,
கொத்மலை,
2010, ஒகத்து 17.

9- 116

# அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள்

**2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டம்**

"கொஸ்றிபா இன்சூரன்ஸ் புரோகர்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்" ஐ நீக்கிவிடுவதற்கான 394 (3) ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய 2004.11.04 ஆந் திகதி கூட்டிணைக்கப்பட்ட "கொஸ்றிபா இன்சூரன்ஸ் புரோகர்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்" எனும் கம்பனி இயங்காமல் இருப்பதாக அல்லது வியாபாரம் மேற்கொள்ளாமல் இருப்பதாக நியாயமான காரணங்களைக் கொண்டு நம்ப முடிகிறது.

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 394 (3) ஆம் பிரிவின் கீழ் கம்பனிகள் பதிவாளர் மா அதிபதி டயஸ் கருணாரத்ன ஹெட்டியாராச்சி ஆகிய நான், இத்திகதியிலிருந்து மூன்று

மாதங்கள் முடிவடையும்போது "கொஸ்றிபா இன்சூரன்ஸ் புரோகர்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்" எனும் கம்பனியானது ஏன் கலைக்கப்படக்கூடாதென்பதற்கு தகுந்த காரணம் காட்டப்படாதவிடத்து கம்பனிகள் பதிவாளர் மா அதிபதி அலுவலகத்திலுள்ள பதிவேட்டிலிருந்து அதனது பெயர் நீக்கப்பட்டு கம்பனி மூடப்பட்டுவிடும் என்பதற்கான அறிவித்தலை இத்தால் வழங்குகிறேன்.

டி. கே. ஹெட்டியாராச்சி,
கம்பனிகள் பதிவாளர் மா அதிபதி.

பீவி 5295
கம்பனிகள் பதிவாளர் திணைக்களம்,
"சமாகம் மெதுர"
400, டீ. ஆர். விஜயவர்த்தன மாவத்தை,
கொழும்பு 10,
2010, யூன் 28.

9- 02

---

## கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீ. எல். சீ.

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடப்படல் (சிறப்பு ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் பிரகாரம் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீ. எல். சீ. (பதிவு இலக்கம் PQ 116) பணிப்பாளர் சபையினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம்

கடன் கணக்கு இலக்கங்கள் : 228509 மற்றும் 259955 - யமுனா அருணகுமாரி அபேநாயக்க லூக் கிலரண்ஸ் அபேநாயக்க

10.06.2008 ஆந் திகதியன்று கூடிய கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீ பணிப்பாளர்கள் சபையினால் பின்வருமாறு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது :-

"கடன் எடுத்த/காணியை ஈடுவைத்த யமுனா அருணகுமாரி அபேநாயக்க முன்பு ரணசிங்க மற்றும் லூக் கிலரண்ஸ் அபேநாயக்க என்பவர்கள் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீ சார்பாக கொழும்பு பிரசித்த நொத்தாரிசு ஜே. எம். பி. எஸ். ஜயவீரவின் 13.08.2004 ஆந் திகதியுடைய முறி இலக்கம் 419 மற்றும் ஆர். கே. ஜயவர்தனவின் 23.09.2005 ஆந் திகதியுடைய முறி இலக்கம் 2413 மூலம் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீக்கு செலுத்த வேண்டிய கொடுப்பனவில் தவறுகை புரிந்துள்ளதாலும் இக்காணியின் விஸ்தீரணம் (0ஏ. 0றூ. 2.88பே.) மேற்படி முறிகள் பிரகாரம் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீக்கு 31.01.2008 ஆந் திகதி வரை ரூபா 14,50,854.25 தற்சமயம் வருமதியாக உள்ளதாலும் அத்துடன் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீ பணிப்பாளர்கள் சபையானது 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடப்படல் 4 ஆவது சிறப்பு சட்டத்தின் பிரகாரம் மேற்படி முறிகள் இலக்கங்கள் 419 மற்றும் 2413 மூலம் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீக்கு ஈடுவைக்கப்பட்டுள்ள இவ் அட்டவணையில் விபரிக்கப்பட்ட காணிகளை மேற்படி சொல்லப்பட்ட பணத்தொகையான ரூபா 14,50,854.25 வுடன் 01.02.2008 ஆந் திகதி முதல் ஏலத்திகதி வரை ரூபா 4,26,001.34 பணத்தொகைக்கு மேலதிக வட்டியாக ஆண்டொன்றுக்கு 13% சதவட்டியுடன் மேலும் 9,03,746.49 பணத்தொகைக்கு மேலதிக வட்டியாக ஆண்டொன்றுக்கு 15% சதவட்டியுடன் விளம்பரச் செலவுகள் வேறு கொடுப்பனவுகள் சேர்த்து அறவிடுவதற்காக கொழும்பு 12, புதுக்கடை வீதியில், இலக்கம் 99, உரிமை பெற்ற ஏலதாரர் எல். பி. சேனநாயக்க மூலம் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்பட வேண்டுமென இத்தால் தீர்மானிக்கப்பட்டது."

### அட்டவணை

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், பல்லே பத்து ஏவகம கோரளையில் அத்துருகிரிய நகர சபை எல்லையில் கொட்டாவ கிராமத்தில் இலக்கம் 105/2, ஹயிலெவல் ரோட்டில் அமைந்துள்ள, நிலஅளவையாளர் சி. எச். ஜி. பெர்னாந்துவின் 17.07.1998 ஆந் திகதியுடைய வரைபடம் இலக்கம் 4517 இல் காண்பிக்கப்பட்ட கட்டிடத்துடன் கூடிய சம்புத்தி இரியகாவத்த காணியின் லொட் 2B இன் எல்லைகள் - வடக்கு : லொட் 2A ; கிழக்கு : கட்டிடங்கள் இலக்கங்கள் 57 மற்றும் 57/2, ஹயிலெவல் ரோட் ; தெற்கு : இக்காணியின் லொட் 5 மற்றும் 6 ; மேற்கு : லொட் 4 ; (12 அடி ரோட்) இக்காணியின் விஸ்தீரணம் (0ஏ. 0றூ. 20.85பே.) மேற்படி வரைபடம்இலக்கம் 4517 இன்படி இக்காணிப் ஹோமாகம காணிப் பதிவகத்தில் G 1324/25 இல் பதிவு செய்யப்பட்டது.

மேற்கூறிய காணி தற்சமயம் அளந்து வரையப்பட்ட வரைபடத்தில் பின்வருமாறு சொல்லப்பட்டுள்ளது:-

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், பல்லே பத்து ஏவகம கோரளையில் மஹரகம நகர சபை எல்லையில் கொட்டாவ கிராமத்தில் கட்டிடம் இலக்கம் 105/2, ஹயிலெவல் ரோட் இல் அமைந்துள்ள நிலஅளவையாளர் என். விக்ரமசிங்கவின் 07.08.2005 ஆந் திகதி உடைய வரைபடம் இலக்கம் 3518/9000 இல் காண்பிக்கப்பட்ட கட்டிடத்துடனான கூடிய சம்புத்தி இரியகாவத்த காணியின் லொட் 2B இன் எல்லைகள் - வடக்கு : நிலஅளவையாளர் சி. எச். ஜி. பெர்னாந்து வின் வரைபடம் இலக்கம் 4512 இல் காண்பிக்கப்பட்ட லொட் 2A ; கிழக்கு : கட்டிடம் இலக்கம் 57 ; ஹயிலெவல் ரோட் ; தெற்கு : வரைபடம் இலக்கம் 185 இல் லொட் 5 மற்றும் 6 ; மேற்கு : வரைபடம் இலக்கம் 185 இல் லொட் 4. இக்காணி விஸ்தீரணம் (0ஏ. 0றூ. 20.85பே.) 0.0527. ஹெக்டயர் மேற்படி வரைபடம் இலக்கம் 3518/9000 இன்படி.

இக் கீழ்க்காணும் காணிகள் ஊடாக பாதைக்கு பாவிக்கும் உரிமையு டன். -

1. மேற்படி கொட்டாவ கிராமத்தில் அமைந்துள்ள நிலஅளவை யாளர் எல். சி. பி. ராஜபக்ச 28.06.1988 ஆந் திகதி வரையப்பட்ட வரைபடம் இலக்கம் 185 இல் காண்பிக்கப்பட்ட சம்புத்தி இரியதாவத்த காணியின் லொட் 3 (ரோட்)) எல்லைகள் - வடக்கு : லொட் 1 ; கிழக்கு : லொட் 2 ; தெற்கு : லொட் 4 ; மேற்கு : கட்டிடம் இலக்கம் 85 ஹயிலெவல் ரோட். இக்காணியின் விஸ்தீரணம் (0ஏ. 0றூ. 0.28பே.) மேற்படி வரைபடம் இலக்கம் 185 இன்படி. இக்காணி ஹோமாகம காணி பதிவகத்தில் G 1324/26 இல் பதிவுசெய்யப்பட்டது.

2. மேற்படி கொட்டாவ கிராமத்தில் அமைந்துள்ள நிலஅளவையாளர் எல். சி. பி. ராஜபக்சவின் 28.06.1988 ஆந் திகதி வரையப்பட்ட வரைபடம் இலக்கம் 185 இல் காண்பிக்கப்பட்ட சம்புத்தி இரியாவத்த காணியின் லொட் 4 (ரோட்) எல்லைகள் லொட்) 3 ; கிழக்கு : லொட் 2 மற்றும் 5 ; தெற்கு : லொட் 5 ; மேற்கு : ரோட். எல்லைகள் இக்காணியின் விஸ்தீரணம் (0ஏ. 0றூ. 2.14பே.) மேற்படி வரைபடம் 185 இன்படி இக்காணி ஹோமாகம காணிப் பதிவகத்தில் G 1511/216 பதிவுசெய்யப்பட்டது.

3. மேற்படி கொட்டாவ கிராமத்தில் அமைந்துள்ள நிலஅளவையாளர் எல். சி. பி. ராஜபக்சவின் 28.06.1988 ஆந் திகதியுடைய வரைபடம் இலக்கம் 185 இல் காண்பிக்கப்பட்ட சம்புத்தி

இரியகாவத்த காணியின் லொட் 7 (ரோட்)) எல்லைகள் - வடக்கு: லொட் 5மற்றும் 6 ; கிழக்கு : கட்டிடங்கள் இலக்கங்கள் 57 மற்றும் 57/2, ஹயிலெவல் ரோட் ; தெற்கு : ஹயிலெவல் ரோட் ; மேற்கு : ரோட் இக்காணியின் விஸ்தீரணம் (0ஏ. 0றூ. 03.00பே.) மேற்படி வரை படம் 185 இன்படி இக்காணி ஹோமாகம காணிப் பதிவகத்தில் G 1511/217 இல் பதிவுசெய்யப்பட்டது.

(திருமதி) ஆர். ஆர். துனுவில,
கம்பனிச் செயலாளர்.

9-144

---

## கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீ. எல். சீ.

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடப்படல் (சிறப்பு ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் பிரகாரம் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீ. எல். சீ. (பதிவு இலக்கம் PQ 116) பணிப்பாளர் சபையினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம்

கணக்கு இலக்கம் : 1930012102
கடன் கணக்கு இலக்கம் : 465592 - கல்பி சமண்தா ஜயவர்தன

30.03.2010 ஆந் திகதியன்று கூடிய கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீ பணிப்பாளர்கள் சபையினால் பின்வருமாறு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது :-

''கடன் எடுத்த கே. வீ. ஏஜன்சி என்ற பெயரில் தனி உரிமையாளராக வியாபாரம் செய்யும் கல்பி சமன்தா ஜயவர்தன என்பவர் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீ சார்பாக கொழும்பு பிரசித்த நொத்தாரிசு டபிள்யூ. எல். ஜயவீரவின் 19.08.2008 ஆந் திகதியுடைய முறி இலக்கம் 2775 மூலம் செலுத்த வேண்டிய கொடுப்பனவில் தவறுகை புரிந்துள்ளதாலும் அத்துடன் மேற்படி முறி பிரகாரம் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீக்கு 05.02.2010 ஆந் திகதி வரை ரூபா 24,55,557 தற்சமயம் வருமதியாக உள்ளதாலும் அத்துடன் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீ பணிப்பாளர்கள் சபையானது 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடப்படல் 4 ஆவது சிறப்பு சட்டத்தின் பிரகாரம் மேற்படி முறி இலக்கம் 2775 மூலம் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீக்கு ஈடுவைக்கப்பட்டுள்ள காணிகளை மேற்படி சொல்லப்பட்ட ரூபா 24,55,577 உடன் 06.02.2010 ஆந் திகதி முதல் ஏலத்திகதி வரை ரூபா 21,76,165 பணத்தொகைக்கு மேலதிக வட்டியாக ஆண்டொன்றுக்கு 22% சதவட்டியுடன் விளம்பரச் செலவுகள் வேறு கொடுப்பனவுகள் சேர்த்து அறவிடுவதற்காக கொழும்பு 12, புதுக்கடை வீதியில், இலக்கம் 99, உரிமை பெற்ற ஏலதாரர் எல். பி. சேனநாயக்க மூலம் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்பட வேண்டுமென இத்தால் தீர்மானிக்கப் பட்டது.''

### அட்டவணை

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், பல்லே பத்து சல்பிட்டி கோரளையில் தெஹிவளை, கல்கிஸ்ஸ மாநகர சபை எல்லையில் அத்திடிய தெற்கு லொட் இலக்கம் 25 அத்திட்டிய கிராமத்தில் அமைந்துள்ள கட்டிடங்கள் இலக்கங்கள் 44 மற்றும் 44/1 கமுனு மாவத்தை (முன்பு மண்திரிமுல்ல ரோட்) உள்ள நிலஅளவையாளர் ஜி. எல். பி. நானாயக்காரவின் 27.10.1990 ஆந் திகதியுடைய வரைபடம் இலக்கம் 9129 இல் காண்பிக்கப்பட்ட கோண்காவத்த அல்லது குசியாவத்த காணியின் லொட் 1 எல்லைகள் - வடக்கு : ரோட் ; கிழக்கு: லொட் 2 ; தெற்கு : லொட் 5 (10 அடி ரோட்) ; மேற்கு : கமுனு மாவத்தை இக்காணியின் விஸ்தீரணம் (0ஏ. 0றூ. 26பே.) மேற்படி வரைபடம் இலக்கம் 9129 படி இக்காணி தெல்கந்த-நுகேகொடை காணிப் பதிவகத்தில் M 2156/77 இல் பதிவுசெய்யப்பட்டது.

(திருமதி) ஆர். ஆர். துனுவில,
கம்பனிச் செயலாளர்.

9-147

---

## 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டம்

''சேடிகுரோவ் ரெசிடன்ஸீஸ் (பிறைவேட்) லிமிட்டெட்'' ஐ நீக்கிவிடுவதற்கான 394 (3) ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய 2006.11.22 ஆந் திகதி கூட்டிணைக்கப்பட்ட ''சேடிகுரோவ்ரெசிடன்ஸீஸ் (பிறைவேட்) லிமிட்டெட்'' எனும் கம்பனி இயங்காமல் இருப்பதாக அல்லது வியாபாரம் மேற்கொள்ளாமல் இருப்பதாக நியாயமான காரணங்களைக் கொண்டு நம்ப முடிகிறது.

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 394 (3) ஆம் பிரிவின் கீழ் கம்பனிகள் பதிவாளர் மா அதிபதி டயஸ் கருணாரத்ன ஹெட்டியாராச்சி ஆகிய நான், இத்திகதியிலிருந்து மூன்று மாதங்கள் முடிவடையும்போது ''சேடிகுரோவ் ரெசிடன்ஸீஸ் (பிறைவேட்) லிமிட்டெட்'' எனும் கம்பனியானது அது ஏன் கலைக்கப்படக்கூடாதென்பதற்கு தகுந்த காரணம் காட்டப்படாதவிடத்து கம்பனிகள் பதிவாளர் மா அதிபதி அலுவலகத்திலுள்ள பதிவேட்டிலிருந்து அதனது பெயர் நீக்கப்பட்டு கம்பனி மூடப்பட்டுவிடும் என்பதற்கான அறிவித்தலை இத்தால் வழங்குகிறேன்.

டி. கே. ஹெட்டியாராச்சி,
கம்பனிகள் பதிவாளர் மா அதிபதி.

பீவி 6203
கம்பனிகள் பதிவாளர் திணைக்களம்,
"சமாகம் மெதுர"
400, டீ. ஆர். விஜயவர்த்தன மாவத்தை,
கொழும்பு 10,
2010, யூலை 28.

9-03

---

## 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டம்

''ஒடோ வீல்ஸ் ட்ரேடிங் (பிறைவேட்) லிமிட்டெட்'' ஐ நீக்கிவிடுவதற்கான 394 (3) ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய 2006.08.25 ஆந் திகதி கூட்டிணைக்கப்பட்ட ''ஒடோ வில்ஸ் ட்ரேடிங் (பிறைவேட்) லிமிட்டெட்'' எனும் கம்பனி இயங்காமல் இருப்பதாக அல்லது வியாபாரம் மேற்கொள்ளாமல் இருப்பதாக நியாயமான காரணங்களைக் கொண்டு நம்ப முடிகிறது.

*2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 394 (3) ஆம் பிரிவின் கீழ் கம்பனிகள் பதிவாளர் மா அதிபதி டயஸ் கருணாரத்ன ஹெட்டியாராச்சி ஆகிய நான், இத்திகதியிலிருந்து மூன்று மாதங்கள் முடிவடையும்போது "ஒடோ வில்ஸ் ட்ரேடிங் (பிறைவேட்) லிமிட்டெட்" எனும் கம்பனியானது அது ஏன் கலைக்கப்படக்கூடா தென்பதற்கு தகுந்த காரணம் காட்டப்படாதவிடத்து கம்பனிகள் பதிவாளர் மா அதிபதி அலுவலகத்திலுள்ள பதிவேட்டிலிருந்து தனது பெயர் நீக்கப்பட்டு கம்பனி மூடப்பட்டுவிடும் என்பதற்கான அறிவித்தலை இத்தால் வழங்குகிறேன்.*

டி. கே. ஹெட்டியாராச்சி,
கம்பனிகள் பதிவாளர் மா அதிபதி.

பீவி 1981
கம்பனிகள் பதிவாளர் திணைக்களம்,
"சமாகம் மெதுர"
400, டீ. ஆர். விஜயவர்த்தன மாவத்தை,
கொழும்பு 10,
2010, யூலை 28.

9- 04

---

**2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டம்**

"லெதர் டச் (பிறைவேட்) லிமிட்டெட்" ஐ நீக்கிவிடுவதற்கான 394 (3) ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

*1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய 2001.07.26 ஆந் திகதி கூட்டிணைக்கப்பட்ட "லெதர் டச் (பிறைவேட்) லிமிட்டெட்" எனும் கம்பனி இயங்காமல் இருப்பதாக அல்லது வியாபாரம் மேற்கொள்ளாமல் இருப்பதாக நியாயமான காரணங்களைக் கொண்டு நம்ப முடிகிறது.*

*2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 394 (3) ஆம் பிரிவின் கீழ் கம்பனிகள் பதிவாளர் மா அதிபதி டயஸ் கருணாரத்ன ஹெட்டியாராச்சி ஆகிய நான், இத்திகதியிலிருந்து மூன்று மாதங்கள் முடிவடையும்போது "லெதர் டச் (பிறைவேட்) லிமிட்டெட்" எனும் கம்பனியானது அது ஏன் கலைக்கப்படக்கூடாதென்பதற்கு தகுந்த காரணம் காட்டப்படாதவிடத்து கம்பனிகள் பதிவாளர் மா அதிபதி அலுவலகத்திலுள்ள பதிவேட்டிலிருந்து தனது பெயர் நீக்கப்பட்டு கம்பனி மூடப்பட்டுவிடும் என்பதற்கான அறிவித்தலை இத்தால் வழங்குகிறேன்.*

டி. கே. ஹெட்டியாராச்சி,
கம்பனிகள் பதிவாளர் மா அதிபதி.

பீவி 4735
கம்பனிகள் பதிவாளர் திணைக்களம்,
"சமாகம் மெதுர"
400, டீ. ஆர். விஜயவர்த்தன மாவத்தை,
கொழும்பு 10,
2010, யூலை 28.

9- 05

---

**2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டம்**

"தரங்க எசோசியேட்ஸ்(பிறைவேட்) லிமிட்டெட்" ஐ நீக்கிவிடுவதற்கான 394 (3) ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

*1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய 2005.05.27 ஆந் திகதி கூட்டிணைக்கப்பட்ட "தரங்க எசோசியேட்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்" எனும் கம்பனி இயங்காமல் இருப்பதாக அல்லது வியாபாரம் மேற்கொள்ளாமல் இருப்பதாக நியாயமான காரணங்களைக் கொண்டு நம்ப முடிகிறது.*

*2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 394 (3) ஆம் பிரிவின் கீழ் கம்பனிகள் பதிவாளர் மா அதிபதி டயஸ் கருணாரத்ன ஹெட்டியாராச்சி ஆகிய நான், இத்திகதியிலிருந்து மூன்று மாதங்கள் முடிவடையும்போது "தரங்க எசோசியேட்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்" எனும் கம்பனியானது அது ஏன் கலைக்கப்படக் கூடாதென்பதற்கு தகுந்த காரணம் காட்டப்படாதவிடத்து கம்பனிகள் பதிவாளர் மா அதிபதி அலுவலகத்திலுள்ள பதிவேட்டிலிருந்து அதனது பெயர் நீக்கப்பட்டு கம்பனி மூடப்பட்டுவிடும் என்பதற்கான அறிவித்தலை இத்தால் வழங்குகிறேன்.*

டி. கே. ஹெட்டியாராச்சி,
கம்பனிகள் பதிவாளர் மா அதிபதி.

பீவி 6336
கம்பனிகள் பதிவாளர் திணைக்களம்,
"சமாகம் மெதுர"
400, டீ. ஆர். விஜயவர்த்தன மாவத்தை,
கொழும்பு 10,
2010, யூலை 28.

9- 06

---

**கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீ. எல். சீ.**

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடப்படல் 4 ஆவது சிறப்பு ஏற்பாடுகள் சட்டத்தின் பிரகாரம் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீ. எல். சீ. (பதிவு இலக்கம் PQ 116) பணிப்பாளர் சபையினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம்*

கடன் கணக்கு இலக்கம் : 378328, 412102
கணக்கு இலக்கம் : 1070023348 - முணசிங்க கண்கானம்கே சந்திரகுமார மற்றும் இந்தராணி ருவன் பதிரண

27.11.2009 ஆந் திகதியன்று கூடிய கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீ பணிப்பாளர்கள் சபையினால் பின்வருமாறு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது :-

"கடன் எடுத்த/காணியை ஈடுவைத்த முணசிங்க கண்கானம்கே சந்திரகுமார மற்றும் இந்தராணி ருவன் பதிரண என்பவர்கள் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீ சார்பாக மாத்தறை பிரசித்த நொத்தாரிசு டி. திசாநாயக்கவின் 24.06.2007 ஆந் திகதியுடைய முறி இலக்கம் 19538 மற்றும் 30.11.2007 ஆந் திகதியுடைய முறி இலக்கம் 20013 மூலம் செலுத்த வேண்டிய கொடுப்பனவில் தவறுகை புரிந்துள்ளதாலும் அத்துடன் மேற்படி முறி பிரகாரம்

கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீக்கு 28.09.2009 ஆந் திகதி வரை ரூபா 44,76,130.56 தற்சமயம் வருமதியாக உள்ளதாலும் அத்துடன் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீ பணிப்பாளர்கள் சபையானது 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடப்படல் 4 ஆவது சிறப்பு சட்டத்தின் பிரகாரம் மேற்படி முறிகள் இலக்கங்கள் 19853 மற்றும் 20013 மூலம் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீக்கு ஈடுவைக் கப்பட்டுள்ள இவ் அட்டவணையில் விபரிக்கப்பட்ட காணிகளை மேற்படி சொல்லப்பட்ட பணத்தொகையான ரூபா 44,76,130.56 வுடன் 29.09.2009 ஆந் திகதி முதல் ஏலத்திகதி வரை ரூபா 22,01,216.66 பணத்தொகைக்கு மேலதிக வட்டியாக ஆண்டொன்றுக்கு 29% சதவட்டியுடன் மேலும் 17,57,600 பணத்தொகைக்கு மேலதிக வட்டியாக ஆண்டொன்றுக்கு 22% சதவட்டியுடன் விளம்பரச் செலவுகள் வேறு கொடுப்பனவுகள் சேர்த்து அறவிடுவதற்காக கொழும்பு 12, புதுக்கடை வீதியில், இலக்கம் 99, உரிமை பெற்ற ஏலதாரர் எல். பி. சேனநாயக்க மூலம் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்பட வேண்டுமென இத்தால் தீர்மானிக்கப்பட்டது.''

**அட்டவணை**

தென் மாகாணம், மாத்தறை மாவட்டம், மாத்தறை மாநகர சபை எல்லையில் வெலிவேரிய கிராமத்தில் சாரம் முதலி மாவத்தை கட்டிடம் இலக்கம் 21 இல் அமைந்துள்ள நிலஅளவையாளர் ஜே. தர்மபாலவின் 31.03.1977 ஆந் தகிதியுடைய வரைபடம் இலக்கம் 1979 இல் காண்பிக்கப்பட்ட போகா மண்டிய அல்லது போகாகெல காணியின் லொட் 1 எல்லைகள் - வடக்கு : சாரம் முதலி மாவத்தை ; கிழக்கு : தரகொட்டுவ ; தெற்கு : இக்காணியின் லொட் 6 மற்றும் 7 ; மேற்கு : இக்காணியின் லொட் 2 இல் காணியின் விஸ்தீரணம் (0ஏ. 0றூ. 20பே.) இக்காணி மாத்தறை காணி பதிவகத்தில் A 317/3 இல் பதிவு செய்யப்பட்டது.

மேற்படி சொல்லப்பட்ட காணி நிலஅளவையாளர் டி. யு. அபேகுணவர்தனவின் 12.06.2007 ஆந் திகதியுடையதும் வரைபடம் இலக்கம் 2953 இன்படி லொட் 1 விஸ்தீரணம் (0ஏ. 0றூ. 20பே.).

(திருமதி) ஆர். ஆர். துனுவில,
கம்பனிச் செயலாளர்.

9-145

---

## 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டம்

''மெக்வின் என்ஜினியரிங் சேர்விசஸ் (பிறைவேட்) லிமிட்டெட்'' ஐ நீக்கிவிடுவதற்கான 394 (3) ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய 1999.07.27 ஆந் திகதி கூட்டிணைக்கப்பட்ட ''மெக்வின் என்ஜினியரிங் சேவிசஸ் (பிறைவேட்) லிமிட்டெட்'' எனும் கம்பனி இயங்காமல் இருப்பதாக அல்லது வியாபாரம் மேற்கொள்ளா மல் இருப்பதாக நியாயமான காரணங்களைக் கொண்டு நம்ப முடிகிறது.

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 394 (3) ஆம் பிரிவின் கீழ் கம்பனிகள் பதிவாளர் மா அதிபதி டயஸ் கருணாரத்ன ஹெட்டியாராச்சி ஆகிய நான், இத்திகதியிலிருந்து மூன்று மாதங்கள் முடிவடையும்போது ''மெக்வின் என்ஜினியரிங் சேர்விசஸ் (பிறைவேட்) லிமிட்டெட்'' எனும் கம்பனியானது அது ஏன் கலைக்கப்படக்கூடா தென்பதற்கு தகுந்த காரணம் காட்டப்படாதவிடத்து கம்பனிகள் பதிவாளர் மா அதிபதி அலுவலகத்திலுள்ள பதிவேட்டிலிருந்து அதனது பெயர் நீக்கப்பட்டு கம்பனி மூடப்பட்டுவிடும் என்பதற்கான அறிவித்தலை இத்தால் வழங்குகிறேன்.

டி. கே. ஹெட்டியாராச்சி,
கம்பனிகள் பதிவாளர் மா அதிபதி.

பீவி 13174
கம்பனிகள் பதிவாளர் திணைக்களம்,
"சமாகம் மெதுர"
400, டீ. ஆர். விஜயவர்த்தன மாவத்தை,
கொழும்பு 10,
2010, யூலை 29.

9- 07

---

## செலான் வங்கி ப.வ.க.

(2007 ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்துக்கிணங்க PQ9 குறிப்பீட்டின்கீழ் பதிவுசெய்யப்பட்டது)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறிவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ், செலான் வங்கி ப.வ.க. பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட தீர்மானம்

கணக்கு இல. : 0320 -316010 -001 - கறுவாத்தோட்டக் கிளை

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழ், செலான் வங்கி ப.வ.க. பணிப்பாளர் சபையினால் 2010.03.15 ஆந் திகதி நடத்தப்பட்ட கூட்டத்தில் பின்வருமாறு விசேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானிக்கப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது:-

இ. அ. நி. கூ. வங்கியின் பணிப்பாளர் சபையானது, 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினாலும், பின்னர் திருத்தப் பட்டவாறான 1955 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனச் சட்டத்தினாலும் அவர்களுக்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின்கீழ் 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 13 ஆம் பிரிவின் நியதிகளின்படி மேற்சொல்லப்பட்ட 13072 ஆம், 14265 ஆம் மற்றும் 15244 ஆம் இலக்க ஈட்டுமுறிகளின் பொருத்தனைகளுக்கிணங்க, இ. அ. நி. கூ. வங்கியினால் உறப்பட்ட காணியையும் வளவுகளையும் விளம்பரப்படுத்துவதற்கான செலவுகள், விற்பதற்கான செலவுகள், செலவிடப்பட்ட மற்றெல்லாப் பணங்கள், செலவு தொகைகள் மற்றும் வேறு இறுப்பனவுகள் என்பவற்றோடு சேர்த்து பதினாறு இலட்சத்து முப்பத்து மூவாயிரத்து நூற்று எண்பத்தாறு ரூபா பன்னிரண்டு சதம் (ரூ. 16,33,186.12) கொண்ட தொகையும் 2010, யூன் 1 ஆந் திகதி தொடக்கம் விற்பனைத் திகதி வரை ஒரு இலட்சத்து தொண்ணூற்று ஒன்பதாயிரத்து தொளாயிரத்து எண்பத்து நான்கு ரூபா (ரூ. 1,99,984) கொண்ட தொகை மீது ஆண்டொனறுக்கு உயர்வான 0.5 சதவீதத்துக்கு மிகக் கிட்டியதாக நேர்த்தியாக்கப்பட்டு ஒவ்வோராண்டும் சனவரி , ஏப்பிறல், யூலை, ஒற்றோபர் ஆகிய மாதங்களின் முதலாவது வேலைநாளன்று மீளாயப்படும் சராசரி எடைவீதமளிக்கப்பட்ட பிரதான கடன்கொடுக்கும் வீதத்துக்கு மேல் (சளபீவீ) ஆண்டொன்றுக்கு ஏழு தசம் ஐந்து சதவீத (7.5%) வட்டியும் அத்துடன் ஐந்து இலட்சத்து நாற்பத்திரண்டாயிரத்து எண்ணூற்று நாற்பத்தெட்டு ரூபா (ரூ. 5,42,848) கொண்ட தொகை மீது ஒவ்வோராண்டும் சனவரி , ஏப்பிறல், யூலை, ஒற்றோபர் ஆகிய மாதங்களின் முதலாவது வேலை நாளன்று மீளாயப்படும். மீளாய்வுத் திகதியன்று நிலவுகின்ற பின்வரும் அடிப்படை வீதங்களுள் உயர்ந்ததாகவி ருக்கும் ஏற்புடையற்பாலதான வட்டி வீதங்களும் ஆண்டொன்றுக்கு எட்டு சதவீத (8%) விளிம்பும்.

(அ) ஆண்டொன்றுக்கு உயர்வான 0.5 சதவீதத்துக்கு மிகக் கிட்டியதாக நேர்த்தியாக்கப்பட்ட சராசரி எடைவீதமளிக்கப்பட்ட பிரதான கடன்கொடுக்கும் வீதம் (சளபிவீ) அல்லது

(ஆ) ஆண்டொன்றுக்கு உயர்வான 0.5 சதவீதத்துக்கு மிகக் கிட்டியதாக நேர்த்தியாக்கப்பட்ட பிடித்துவைத்தல் வரியின் தேறிய சராசரி 91 நாள் திறைசேரி உண்டியல் வீதம்,

அத்துடன் ஏழு இலட்சத்து அறுபத்தையாயிரத்து தொளாயிரத்து ஐம்பத்துமூன்று ரூபா (ரூ. 7,65,953) கொண்ட தொகை மீது ஒவ்வோராண்டும் சனவரி , ஏப்பிறல், யூலை, ஒற்றோபர் ஆகிய மாதங்களின் முதலாவது வேலைநாளன்று மீளாயப்படும். மீளாய்வுத் திகதியன்று நிலவுகின்ற பின்வரும் அடிப்படை வீதங்களுள் உயர்ந்ததாக விருக்கும் வட்டி வீதமும் ஆண்டொன்றுக்கு எட்டு சதவீத (8%) விளிம்பும்.

(அ) ஆண்டொன்றுக்கு உயர்வான 0.5 சதவீதத்துக்கு மிகக் கிட்டியதாக நேர்த்தியாக்கப்பட்ட சராசரி எடைவீதமளிக்கப்பட்ட பிரதான கடன்கொடுக்கும் வீதம் (சளபிவீ) அல்லது

(ஆ) ஆண்டொன்றுக்கு உயர்வான 0.5 சதவீதத்துக்கு மிகக் கிட்டியதாக நேர்த்தியாக்கப்பட்ட பிடித்துவைத்தல் வரியின் தேறிய சராசரி 91 நாள் திறைசேரி உண்டியல் வீதம்,

அல்லது விற்பனை செய்யப்படும் நேரத்தில் செலுத்தப் படாதெஞ்சியுள்ள அதன் ஏதேனும் பாகத்தினை அறவிடுவதற்காக 13072 ஆம், 14265 ஆம் மற்றும் 15244 ஆம் இலக்க மேற்சொல்லப்பட்ட ஈட்டுமுறிகள் மூலம் மாதம்பே சம்சன் டி சில்வா என்பவரினால் இ. அ. நி. கூ. வங்கிக்கு ஈடுவைக்கப்பட்ட கீழே விபரிக்கப்படும் சொல்லப்பட்ட காணியும் வளவுகளும் கொழும்பைச் சேர்ந்த உத்தரவுபெற்ற ஏலதாரர் திருவாளர் ஷொக்மன் அன்ட் சமரவிக்ரம அவர்களினால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டுமென இத்தால் தீர்மானிக்கின்றது.''

**13072 ஆம், 14265 மற்றும் 15244 ஆம் இலக்க ஈட்டுமுறிகள் மூலம் ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விவரணம்**

வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டத்திலுள்ள கட்டுகம்பொல ஹத்பத்துவின் யட்டிக்கஹா கோறளை தெற்கில் பரிகொட கிராமத்தில் அமைந்துள்ளதும், உரிமம்பெற்ற நிலஅளவையாளர் பீ. ஏ. என். குணசிறி என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2003.05.20 ஆந் திகதிய 3137 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டம் 01 எனக் குறித்துக் காட்டப்பட்டதும், கணங்கமுவ வத்த எனவழைக் கப்படுவதுமான அக்காணித்துண்டு அடங்கலும் ; சொல்லப்பட்ட காணித்துண்டம் 01, சொல்லப்பட்ட வரைபடத்தின்படி பின்வரும் எல்லைகளையுடையது - வடக்கில் : குளியாப்பிட்டி - குருநாகல் பிரதான வீதி ; கிழக்கில் : இகிவ 964 இலுள்ள காணித்துண்டம் 65; தெற்கில் : இகிவ 964

இலுள்ள காணித்துண்டம் 75 மற்றும் ; மேற்கில் : இகிவ 964 இலுள்ள காணித்துண்டம் 86 (வீதி) ; பரப்பளவில் இது. அதன்மீதுள்ள மரங்கள், பயிர்கள், கட்டிடங்கள் மற்றும் எல்லாவற்றுடனும் இரண்டு றூட் இருபத்துமூன்று பேர்ச்சஸ்கள் (0ஏ. 2றூ. 23.பே.) கொண்டுள்ளது.

ஏ. என். பொன்சேக்கா,
பொது முகாமையாளர்.

இ. அ. நி.கூ. வங்கி,
இல. 73/5, காலி வீதி,
கொழும்பு 3.

9-191

---

**சம்பத் வங்கி பீஎல்சீ**

(முன்பு சம்பத் வங்கி லிமிட்டெட் என அழைக்கப்பட்டது)

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர்கள் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்*

கணக்கு இல.: 0001 1003 4709 - சி. எஸ். யு. ஒட்டோ மோட்டின்ஸ்

சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர்கள் சபை 2003, யூன் 26 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் சிறப்பாகவும் ஏகமனதாகவும் பின்வருமாறு தீர்மானித்தது .-

'கடப்பாடுடையவர்களான " சி. எஸ். யு. ஒட்டோ மோட்டின்ஸ்" என்ற பெயரின் கீழும் மகுடத்தின்கீழும் குழுமத்தின் கீழும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசிலுள்ள கொழும்பு 5, பார்க் வீதி, எஸ்தர் அவெனியு, 4 ஆம் இலக்கத்தின் பங்காண்மையாகத் தொழிலைக் கொண்டு நடாத்துகின்ற அதே முகவரியைச் சேர்ந்த ஜாகொட லியனகே உபாலி ரஞ்சித் சிறிசேன மற்றும் ஜாகொட லியனகே சமிந்த காந்த பிருதிவிராஜ் சிறிசேன என்பவர்களும் ஈடுவைத்தவராக சொல்லப்பட்ட ஜாகொட லியனகே உபாலி ரஞ்சித் சிறிசேன என்பவரும் சம்பத் வங்கி லிமிட்டெட் சார்பில் கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு எஸ். கே. தசநாயக்க என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 1990, செத்தெம்பர் 14 ஆந் திகதிய 769 ஆம் இலக்க முறி மீதும் கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு ஏ. எம். கே. ஊ. குணதிலகவினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 1995, ஒற்றோபர் 19 ஆந் திகதிய 1188 ஆம்இலக்க முறிமீதும் கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு ஆர். எல். எஸ். சேனரட்னவினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 1998, செத்தெம்பர் 15 ஆந் திகதிய 28 ஆம் இலக்க முறி மீதும் வருமதியாகவுள்ள கொடுப்பனவில் செலுத்துவதில் தவணை தவறியுள்ளார்களாதலாலும், சொல்லப்பட்ட முறிகள்மீது 2003, ஏப்பிறல் 25 ஆந் திகதியன்றுள்ளவாறாக முப்பத்து நான்கு இலட்சத்து இருபதாயிரத்து எழுநூற்று எண்பது ரூபா (ரூ. 34,20,780) கொண்ட தொகை தற்போது சம்பத் வங்கி லிமிட்டெட்டுக்கு செல்மதியாகவும் வருமதியாகவும வந்துள்ளதாதலாலும், சம்பத் வங்கி லிமிட்டெட் பணிப்பாளர்கள் சபையானது சொல்லப்பட்ட முப்பத்து நான்கு இலட்சத்து இருபதாயிரத்து எழுநூற்று எண்பது ரூபா (ரூ. 34,20,780) கொண்ட தொகையை, 2003, ஏப்பிறல் 26 ஆந் திகதி தொடக்கம் விற்பனைத் திகதி வரை இருபது இலட்சத்து முப்பத்தையாயிரத்து தொளாயிரத்து தொண்ணூற்று ஆறு ரூபா (ரூ. 20,35,996) கொண்ட தொகை மீது ஆண்டொன்றுக்கு 19% வட்டியுடனும் இதுவரை பெறப்பட்ட கொடுப்பனவுகள் (எவையேனும் இருப்பின்) அவைபோக, அடையப்பட்ட விளம்பரச்செலவுகள், விற்பனைச் செலவுகள், ஏனைய இறுப்பனவுகள் என்பவற்றோடு சேர்த்து அறவிடுவதற்காக, சொல்லப்பட்ட 796, 1185 மற்றும் 28 ஆம் இலக்க முறிகள் மூலம் சம்பத் வங்கிக்கு ஈடுவைக்கப்பட்ட இதற்கான அட்டணையில் மிக முழுமையாக விபரிக்கப்பட்ட ஆதனமும் வளவுகளும் கொழும்பைச் சேர்ந்த உத்தரவுபெற்ற ஏலதாரர் சொக்மன் மற்றும் சமரவிக்ரம அவர்களால் பகிரங்க ஏலமூலம் விற்கப்பட வேண்டுமென 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்களினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் சபைக்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களில் கீழ் இத்தால் தீர்மானிக்கின்றது."

**அட்டவணை**

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், கொழும்பு மாநகர சபை எல்லைகளுக்குள்ளாக திம்பிரிகஸ்யாய வட்டாரத்தில் அமைந்துள்ள தற்போது எஸ்தர் அவெனியூ. 4 ஆம் வரிமதிப்பீட்டிலக்கங்கள் கொண்ட முன்னர் பார்க் வீதி, 250/10 வரிமதிப்பீட்டில்கம் கொண்ட, அதிற் காணப்படும் மண், மரங்கள், தோட்டப் பயிர்கள், மற்றெல்லா வற்றுடனும் சேர்ந்த குணதிலக கார்டின்ஸ் என அழைக்கப்படும் காணியின் பாகமான, உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எம். எஸ். ரி. பி. சேனாதீரவினால் ஆக்கப்பட்ட 1969, யூலை 29 ஆந் திகதிய 384 ஆம் இலக்க வரைபடத்தில் ஏ காணித்துண்டென அடையாளமிடப்பட்டதும் எஸ்தர் அவெனியு 2 ஆம் வரிமதிப்பீட்டிலக்கம் கொண்ட வளவுகளை வடக்கெல்லையாகவும் எஸ்தர் அவெனியுவைக் கிழக்கெல்லையாகவும் ; எஸ்தர் அவெனியு 6 ஆம் வரிமதிப்பீட்டிலக்கம் கொண்ட வளவுகளைத் தெற்கெல்லையாகவும் பார்க் அவெனியூ 1 ஆம் வரிமதிப்பீட்டிலக்கம் கொண்ட வளவுகளை மேற்கெல்லையாகவும் கொண்டதும் சொல்லப்பட்ட 384 ஆம் இலக்க வரைபடத்தின்படி விஸ்தீரணத்தில் பதினைந்து தசம் ஆறு ஏழு பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 15.67பே.) கொண்டதும் கொழும்பு காணிப் பதிவகத்தில் ஏ 948/77 என்பதில் பதிவு செய்யப்பட்டதுமான பிரித்து வரையறுத்த அக்காணித்துண்டு முழுவதும்.

பின்வரும் காணிகளிலும் அவற்றுக்கு மேலாகவும் அவற்றின் வழியேயும் போக்குவரவு செய்யும் உரிமையுடன் கூடியது:-

மேற்சொல்லப்பட்ட திம்பிரிகஸ்யாய வட்டாரத்தில் அமைந்துள்ள குணதிலக கார்டின்ஸ் என அழைக்கப்படும் காணியின் பாகமான உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஜி. டபிள்யூ. பேர்டினஸ்டினால் ஆக்கப்பட்ட 1959, பெப்புரவரி 28 ஆந் திகதிய 589 ஆம் இலக்க வரைபடத்தில் காட்டப்பட்ட 5 ஆம் காணித்துண்டென அடையாளமிடப்பட்டதும் பார்க் வீதியை வடக்கெல்லையாகவும் எம். டபிள்யூ. டி. பர்னாந்துவின் உரிமையாளர்களினால் கோரப்படும் 280 (பாகம்) வரிமதிப்பீட்டிலக்கம் கொண்ட வளவுகளைக் கிழக்கெல்லையாகவும் ; 2, 4, 25, 69, 22, 10, 11, 19, 12, 13, 16, 14 மற்றும் 14ஏ காணித்துண்டுகளைத் தெற்கெல்லையாகவும் பார்க் வீதியையும் 2 ஆம் காணித்துண்டையும் மேற்கெல்லையாகவும் கொண்டதும் சொல்லப்பட்ட 589 ஆம் இலக்க வரைபடத்திற்கிணங்க விஸ்தீரணத்தில் இருபத்தி நான்கு தசம் இரண்டு ஒன்று பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 24.21பே.) கொண்டதும் கொழும்பு காணிப் பதிவகத்தில் ஏ

948/78 என்பதில் பதிவு செய்யப்பட்டதுமான பிரித்து வரையறுத்த அக்காணித்துண்டு முழுவதும்.

மேற்சொல்லப்பட்ட திம்பிரிகஸ்யாய வட்டாரத்தில் பார்க் வீதி வழியே அமைந்துள்ள (30 அடி அகல வீதி ஒதுக்காக) சொல்லப்பட்ட 589 ஆம் இலக்க வரைபடத்தில் காட்டப்பட்ட 22 ஆம் காணித்துண்டென அடையாள மிடப்பட்டதும் அதே காணியின் 10, 21, 44, 43, 42 காணித் துண்டுகளைக் கிழக்கெல்லையாகவும் ; அதே காணியின் 41 ஆம் காணித்துண்டைத் தெற்கெல்லையாகவும் அதே காணியின் 40, 39, 33, 8, 9 காணித்துண்டுகளை மேற்கெல்லையாகவும் கொண்டதும் சொல்லப்பட்ட 589 ஆம் இலக்க வரைபடத்திற்கிணங்க விஸ்தீரணத்தில் முப்பத்தொன்று தசம் நான்கு ஆறு பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 31.46பே.) கொண்டதும் கொழும்பு காணிப் பதிவகத்தில் ஏ 716/298 என்பதில் பதிவு செய்யப்பட்டதுமான பிரித்து வரையறுத்த அக்காணித்துண்டு முழுவதும்.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

9-194

---

**2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டம்**

"சதேன் புரவின்ஸ் கொயர் மில்ஓனர்ஸ் ஏசோசியேசன்" ஐ நீக்கிவிடுவதற்கான 394 (3) ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய 2007.09.10 ஆந் திகதி கூட்டிணைக்கப்பட்ட "சதேன் புரவின்ஸ் கொயர் மில் ஓனர்ஸ் ஏசோசியேசன்" எனும் கம்பனி இயங்காமல் இருப்பதாக அல்லது வியாபாரம் மேற் கொள்ளாமல் இருப்பதாக நியாயமான காரணங்களைக் கொண்டு நம்ப முடிகிறது.

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 394 (3) ஆம் பிரிவின் கீழ் கம்பனிகள் பதிவாளர் மா அதிபதி டயஸ் கருணாரத்ன ஹெட்டியாராச்சி ஆகிய நான், இத்திகதியிலிருந்து மூன்று மாதங்கள் முடிவடையும்போது "சதேன் புரவின்ஸ் கொயர் மில்ஓனர்ஸ் ஏசோசியேசன்" எனும் கம்பனியானது அது ஏன் கலைக்கப் படக்கூடாதென்பதற்கு தகுந்த காரணம் காட்டப்படாதவிடத்து கம்பனிகள் பதிவாளர் மா அதிபதி அலுவலகத்திலுள்ள பதிவேட்டிலிருந்து அதனது பெயர் நீக்கப்பட்டு கம்பனி மூடப்பட்டுவிடும் என்பதற்கான அறிவித்தலை இத்தால் வழங்குகிறேன்.

டி. கே. ஹெட்டியாராச்சி,
கம்பனிகள் பதிவாளர் மா அதிபதி.

ஜீஏ 2025
கம்பனிகள் பதிவாளர் திணைக்களம்,
"சமாகம் மெதுர"
400, டீ. ஆர். விஜயவர்த்தன மாவத்தை,
கொழும்பு 10,
2010, ஓகத்து 4.

8- 14

---

**2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டம்**

"மொடன் டிஸ்ரிபியுடர்ஸ் ஹொடேல் (பிறைவேட்) லிமிட்டெட்" ஐ நீக்கிவிடுவதற்கான 394 (3) ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய 2003.10.13 ஆந் திகதி கூட்டிணைக்கப்பட்ட "மொடன் டிஸ்ரிபியுடர் ஹொடேல் (பிறைவேட்) லிமிட்டெட்" எனும் கம்பனி இயங்காமல் இருப்பதாக அல்லது வியாபாரம் மேற் கொள்ளாமல் இருப்பதாக நியாயமான காரணங்களைக் கொண்டு நம்ப முடிகிறது.

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 394 (3) ஆம் பிரிவின் கீழ் கம்பனிகள் பதிவாளர் மா அதிபதி டயஸ் கருணாரத்ன ஹெட்டியாராச்சி ஆகிய நான், இத்திகதியிலிருந்து மூன்று மாதங்கள் முடிவடையும்போது "மொடன் டிஸ்ரிபியுடர் ஸ்ஹொடேல் (பிறைவேட்) லிமிட்டெட்" எனும் கம்பனியானது அது ஏன் கலைக்கப்படக்கூடாதென்பதற்கு தகுந்த காரணம் காட்டப்படாதவிடத்து கம்பனிகள் பதிவாளர் மா அதிபதி அலுவலகத்திலுள்ள பதிவேட்டிலிருந்து அதனது பெயர் நீக்கப்பட்டு கம்பனி மூடப்பட்டுவிடும் என்பதற்கான அறிவித்தலை இத்தால் வழங்குகிறேன்.

டி. கே. ஹெட்டியாராச்சி,
கம்பனிகள் பதிவாளர் மா அதிபதி.

பீவி 14884
கம்பனிகள் பதிவாளர் திணைக்களம்,
"சமாகம் மெதுர"
400, டீ. ஆர். விஜயவர்த்தன மாவத்தை,
கொழும்பு 10,
2010, ஓகத்து 04.

9- 15

---

**மக்கள் வங்கி - கம்பளை கிளை**

1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்ட வாறான 1961ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி என்னும் பிரிவின் கீழான தீர்மானம்

மக்கள் வங்கி 1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 1961ஆம் ஆண்டின் 29ஆம் இலக்கச் சட்டம் 29டி இன் பிரகாரம் மக்கள் வங்கிப் பணிப்பாளர் சபையினால் 2010.05.31 ஆந் திகதி நடைபெற்ற கூட்டமொன்றில் ஏகமனதாக பின்வருமாறு தீர்மானிக்கிப்பட்டது:-

"ரத்நாயக்க ராலலாகே சுசில் ரத்நாயக்க (தேசிய அடையாள அட்டை இல. 543230146 V) மற்றும் தசநாயக்க லியனகே மேலா சுரங்கனி குனசேக்கர (தேசிய அடையாள அட்டை இல. 576263325V) ஆகியோர் கட்டுப்பாடுடையவர்களாக மக்கள் வங்கி சார்பில் கண்டி சட்டத்தரணியும் பிரசித்த நொத்தாரிசுமான ஜீவபானி ரத்நாயக்க என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 28.02.2008 மற்றும் 13.07.2006 ஆந் திகதிய 2053 மற்றும் 1603 இலக்க முறிகளின் வருமதியான கொடுப்பனவில் தவறுகை புரிந்துள்ளமையாலும் மக்கள் வங்கிக்கு இருபது இலட்சத்து எண்பத்தேழாயிரத்து அறுநூற்று முப்பத்துமூன்று ரூபா

நாற்பத்திரண்டு சதம் (ரூ. 20,87,633.42) மற்றும் பத்து இலட்சத்து நாற்பத்து நான்காயிரத்து நாநூற்று தொண்ணூறு ரூபா ஐம்பத்தாறு சதம் (ரூ. 10,44,490.56) தற்போது வருமதியாக உள்ளதாலும் அத்துடன் மக்கள் வங்கிப் பணிப்பாளர் சபையானது 1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்கச் சட்டம் 29டி இன் பிரகாரம் அதற்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இதற்கான அட்டவணையில் முழுமையாக விபரிக்கப்பட்டனவும் சொல்லப்பட்ட 2053, 1603 ஆம் இலக்க முறிகளின் மூலம் மக்கள் வங்கிக்கு ஈடுவைக்கப்பட்ட ஆதனமும் வளவுகளும் சொல்லப்பட்ட இருபது இலட்சத்து எண்பத்தேழாயிரத்து அறுநூற்று முப்பத்துமூன்று ரூபா நாற்பத்திரண்டு சதம் (ரூ. 20,87,633.42) இற்கு 26% வருடாந்த வட்டியும் மற்றும் பத்து இலட்சத்து நாற்பத்து நான்காயிரத்து நாநூற்று தொண்ணூறு ரூபா ஐம்பத்தாறு சதம் (ரூ. 10,44,490.56) இற்கு 20.5% வருடாந்த வட்டியும் 03.02.2010 மற்றும் 28.01.2009 ஆந் திகதியிலிருந்து பணத்தொகையை விற்பனை நாள்வரை அதன்மீதான வட்டியும் விளம்பரச் செலவுகள் மற்றும் ஏதேனும் இறுப்பனவுகள் இருந்தால் அவற்றைக் கழித்து அறவிடுவதற்காக கண்டி உரிமம் பெற்ற நிலஅளவையாளர்களான சொக்மன் அன்ட் சமரவிக்ரம என்பவர்களால் பகிரங்க ஏல விற்பனை மூலம் விற்பனை செய்யப்படல் வேண்டும் என இத்தால் தீர்மானிக்கின்றது.''

### ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விவரணமும் அவற்றின் அட்டவணைகளும்

1. மத்திய மாகாணம், கண்டி மாவட்டம். உடபலாத்த கங்கபஹல கோரளை, கம்பளை நகர சபை எல்லைக்குட்பட்ட புவனேகபா 8 ஆம் வட்டாரம் கொடகமயில் அமைந்துள்ள வரிமதிப்பீட்டிலக்கம் 33, பிரித்தெடுக்கப்பட்ட 3 தொடர் காணித்துண்டுகளும் லொட் 2 என அடையாளமிடப்பட்ட ஜமநாரங்கஹமுல கொட்டுவ மற்றும் அதன் பகுதிகளான அரம்பேகெதரவத்த, பல்லேவத்த, அக்குரனேவத்த மற்றும் பரக்கன்கெதரவத்த, என்றழைக்கப்படும் காணியும் கட்டிடங்களும் மற்றும் சகலதுமாகும். உரிமம் பெற்ற நிலஅளவையாளர் பீ. ஆர். டி. பி. ரத்நாயக்க என்பவரினால் தயாரிக்கப்பட்ட 09.01.2007 ஆந் திகதிய 4150 ஆம் இலக்க வரைபடத்தின் பிரகாரம் (18.12.1998 ஆந் திகதிய 4215 ஆம் இலக்க வரைபடத்தின் பிரகாரம் பிரித்தெடுக்கப்பட்ட காணித்துண்டு 4 என அடையாளமிடப்பட்டது) பிரித்தெடுக்கப்பட்ட மேற்படி காணித்துண்டானது. இரண்டு றூட் பூச்சியம் தசம் மூன்று பேர்ச்சஸ் (0ஏ. 2றூ, 0.3பே.) பரப்பளவானது. இதன் எல்லைகள் - வடக்கும் வடகிழக்கும் : லொட் 3 உம் 2806 ஆம் இலக்க வரைபடத்தின் பிரகாரம் லொட் 2 மிகுதிப் பங்கும் ; வடக்கும் வடமேற்கும் : லொட் 1, 4 மற்றும் 3 ; தென்கிழக்கு : வரைபட இல. 2806 இன் பிரகாரம் லொட் 2 அக்குரனகும்புர மற்றும் தெல்கும்புர ; தெற்கும் தென்மேற்கும் : லொட் 4 உம், லொட் 1 உம் ஆகும். அத்துடன் அதனுள்ளடங்கும் மற்றும் சகலதுமாகும். இது கம்பளை காணிப்பதிவகத்தில் C261/01 இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

2. மத்திய மாகாணம், கண்டி மாவட்டம். உடபலாத்த கங்கபஹல கோரளை, கம்பளை நகர சபை எல்லைக்குட்பட்ட புவனேகபா 8 ஆம் வட்டாரம் கொடகமயில் அமைந்துள்ள வரிமதிப்பீட்டிலக்கம் 33, பிரித்தெடுக்கப்பட்ட 3 தொடர் காணித்துண்டுகளும் லொட் 3 என அடையாளமிடப்பட்ட ஜமநாரங்கஹமுல கொட்டுவ மற்றும் அதன் பகுதிகளான அரம்பேகெதரவத்த, பல்லேவத்த, அக்குரனேவத்த மற்றும் பரக்கன்கெதரவத்த, என்றழைக்கப்படும் காணியும் கட்டிடங்களும் மற்றும் சகலதுமாகும். உரிமம் பெற்ற நிலஅளவையாளர் பீ. ஆர். டி. பி. ரத்நாயக்க என்பவரினால் தயாரிக்கப்பட்ட 09.01.2007 ஆந் திகதிய 4150 ஆம் இலக்க வரைபடத்தின் பிரகாரம் பிரித்தெடுக்கப்பட்ட மேற்படி காணித்துண்டானது. பூச்சியம் ஆறு தசம் இரண்டு பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 06.2பே.) பரப்பளவானது. இதன் எல்லைகள் - வடக்கு : புவனேகபா பாதை ; கிழக்கு : இல. 2806 வரைபடத்தின் பிரகாரம் லொட் 2 மிகுதிப் பங்கு ; தெற்கும் தென்கிழக்கும் : மேற்படி வரைபடத்தின் பிரகாரம் லொட் 2 ; மேற்கு : லொட் 1 உம் ஆகும். அத்துடன் அதனுள்ளடங்கும் மற்றும் சகலதுமாகும். இது கம்பளை காணிப் பதிவகத்தில் C261/02 இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

3. மத்திய மாகாணம், கண்டி மாவட்டம். உடபலாத்த கங்கபஹல கோரளை, கம்பளை நகர சபை எல்லைக்குட்பட்ட புவனேகபா 8 ஆம் வட்டாரம் கொடகமயில் அமைந்துள்ள வரிமதிப்பீட்டிலக்கம் 33, பிரித்தெடுக்கப்பட்ட 3 தொடர் காணித்துண்டுகளும் அதன் பகுதிகளான ஜமநாரங்கஹமுல கொட்டுவ மற்றும் அதன் பகுதிகளான அரம்பேகெதரவத்த, பல்லேவத்த, மற்றும் பரகன்கெதரவத்த, என்றழைக்கப்படும் காணியும் கட்டிடங்களும் மற்றும் சகலதுமாகும். உரிமம் பெற்ற நிலஅளவையாளர் பீ. ஆர். டி. பி. ரத்நாயக்க என்பவரினால் தயாரிக்கப்பட்ட 01.10.2007 ஆந் திகதிய 4305 ஆம் இலக்க வரைபடத்தின் பிரகாரம் (பிரித்தெடுக்கப்பட்ட லொட் 1, உரிமம் பெற்ற நிலஅளவையாளரின் 01.10.2007 ஆந் திகதிய 4305 ஆம் இலக்க வரைபடத்தின் பிரகாரம்) பிரித்தெடுக்கப்பட்ட மேற்படி காணித்துண்டானது இரண்டு பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 2பே.) பரப்பளவானது. இதன் எல்லைகள் - வடக்கு : 4302 ஆம் இலக்க வபைடத்தின் பிரகாரம் (லொட் 02 என அடையாளமிடப்பட்ட இக்காணியின் மிகுதிப் பகுதி) ; கிழக்கு : வரைபட இலக்கம் 4150 இன் பிரகாரம் லொட் 3 ; தெற்கு : வரைபட இலக்கம் 4150 இன் பிரகாரம் லொட் 2 ; மேற்கு : 4302 ஆம் இலக்க வரைபடத்தின் பிரகாரம் லொட் 3 உம் ; அதனுள்ளடங்கும் கட்டிடங்கள், மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதுமாகும். இது கம்பளை காணிப்பதிவகத்தில் C207/262 இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

4. மத்திய மாகாணம், கண்டி மாவட்டம், உடபலாத்த கங்கபஹல கோரளை, கம்பளை நகர சபை எல்லைக்குட்பட்ட புவனேகபா 8 ஆம் வட்டாரம் கொடகமயில் அமைந்துள்ள வரிமதிப்பீட்டிலக்கம் 33, பிரித்தெடுக்கப்பட்ட 3 தொடர் காணித்துண்டுகள் ஜமநாரங்கஹமுல கொட்டுவ மற்றும் அதன் பகுதிகளான அரம்பேகெதரவத்த, பல்லேவத்த மற்றும் பரகன்கெதரவத்த, என்றழைக்கப்படும் காணியும் கட்டிடங்களும் மற்றும் சகலதுமாகும். உரிமம் பெற்ற நிலஅளவையாளர் பீ. ஆர். டி. பி. ரத்நாயக்க என்பவரினால் தயாரிக்கப்பட்ட 01.10.2007 ஆந் திகதிய 4305 ஆம் இலக்க வரைபடத்தின் பிரகாரம் பிரித்தெடுக்கப்பட்ட லொட் 2 என அடையாளமிடப்பட்ட காணித்துண்டானது (உரிமம் பெற்ற நிலஅளவையாளரின் 09.01.2007 ஆந் திகதிய 4150 ஆம் இலக்க வரைபடத்தின் பிரகாரம் பிரித்தெடுக்கப்பட்ட லொட் 1 எனும் காணித்துண்டு) பதினொன்று தசம் ஐந்து பேர்ச்சஸ் (0ஏ. 0றூ, 11.5பே.) பரப்பளவானது. இதன் எல்லைகள் - வடக்கு : வரைபட இல. 4302 இன் பிரகாரம் லொட் 3 என அடையாளமிடப்பட்ட இக்காணியின் மிகுதிப் பகுதி ; கிழக்கு : வரைபட இலக்கம் 4150 இன் பிரகாரம் லொட் 2 எனும் காணியின் மிகுதிப் பகுதி ; தெற்கு : வரைபட இலக்கம் 4302 இன் பிரகாரம் லொட் 5 ; மேற்கு : 4302 ஆம் இலக்க வரைபடத்தின் பிரகாரம் லொட் 04 உம் அத்துடன் அதனுள்ளடங்கும் கட்டிடங்கள், மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதுமாகும். இது கம்பளை காணிப் பதிவகத்தில் C207/263 இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

5. மத்திய மாகாணம், கண்டி மாவட்டம். உடபலாத்த கங்கபஹல கோரளை, கம்பளை நகர சபை எல்லைக்குட்பட்ட புவனேகபா 8 ஆம் வட்டாரம் கொடகமயில் அமைந்துள்ள வரிமதிப்பீட்டிலக்கம் 33, பிரித்தெடுக்கப்பட்ட 3 தொடர் காணித்துண்டுகள் ஜமநாரங்கஹாமுல கொட்டுவ மற்றும் அதன் பகுதிகளான அரம்பேகெதரவத்த, பல்லேவத்த, மற்றும் பரக்கன்கெதரவத்த, என்றழைக்கப்படும் காணியும் கட்டிடங்களும் மற்றும் சகலதுமாகும். உரிமம் பெற்ற நிலஅளவையாளர் பீ. ஆர். டி. பி. ரத்நாயக்க என்பவரினால் தயாரிக்கப்பட்ட 09.01.2007

ஆந் திகதிய 4150 ஆம் இலக்க வரைபடத்தின் பிரகாரம் பிரித்தெடுக்கப்பட்ட மேற்படி காணித்துண்டானது ஒன்று தசம் மூன்று பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 1.3பே.) பரப்பளவானது. இதன் எல்லைகள் - வடக்கு : 4150 ஆம் இலக்க வரைபடத்தின் பிரகாரம் லொட் 01 ஐப் பிரிக்கும் வேலியும் ; தென்கிழக்கு : 4150 ஆம் இலக்க வரைபடத்தின் பிரகாரம் லொட் 02 ஐப் பிரிக்கும் உயிர்வேலியும் ; மேற்கு : லொட் 1 ஐப் பிரிக்கும் உயிர் வேலி அத்துடன் அதனுள்ளடங்கும் கட்டிடங்கள், மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதுமாகும். இது கம்பளை காணிப் பதிவகத்தில் C207/247 இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

6. மத்திய மாகாணம், கண்டி மாவட்டம். உடபலாத்த கங்கபஹல கோரளை, கம்பளை நகர சபை எல்லைக்குட்பட்ட கொடகம புவனேகபா பாதையில் அமைந்துள்ள ஜமநாரங்கஹாகொட்டுவ என்றழைக்கப்படும் காணியும் மற்றும் கலதுமாகும். உரிமம்பெற்ற நிலஅளவையாளர் டி. ஏ. ஜயகொட என்பவரினால் தயாரிக்கப்பட்ட 20.08.1990 ஆந் திகதிய உப பிரிவு லொட் 1B (உரிமம் பெற்ற நிலஅளவையாளர் பி. எம். எஸ். பி. கருணாரத்ன என்பவரினால் தயாரிக்கப்பட்ட 18.12.1998 ஆந் திகதிய 4213 ஆம் இலக்க வரைபடத்தில் லொட் D என அடையாளமிடப்பட்டது) மேற்படி காணித்துண்டானது முக்கோண வடிவத்தைக் கொண்டது. லொட் 1B என அடையாள மிடப்பட்டதுமாகும். இது இரண்டு தசம் ஒரு பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 2.1பே.) பரப்பளவானது. இது இரண்டு தசம் ஒரு பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 2.1பே.) பரப்பளவானது இதன் எல்லைகள் - தென்மேற்கும் வடமேற்கும் : 2086 ஆம் இலக்க வரைபடத்தின் பிரகாரம் லொட் 01A என அடையாளமிடப்பட்ட காணியின் மிகுதிப் பகுதியுமாகும்; தென்கிழக்கு : 2806 ஆம் இலக்க வரைபடத்தின் பிரகாரம் லொட் 04B ; 3 ஆம் 2 ஆம் அத்துடன் அதனுள்ளடங்கும் மற்றும் சகலதுமாகும். இது கம்பளை காணிப்பதிவகத்தில் 118/ 151 இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

பிரதேச முகாமையாளர்,
கண்டி.

மக்கள் வங்கி,
பிரதேசத் தலைமை அலுவலகம்,
இல. 17, தலதா வீதி,
கண்டி.

9-114

---

## 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டம்

"ஓனவெடக் (பிறைவேட்) லிமிட்டெட்" ஐ நீக்கிவிடுவதற்கான 394 (3) ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய 2008.10.31 ஆந் திகதி கூட்டிணைக்கப்பட்ட "ஓன வெடக் (பிறைவேட்) லிமிட்டெட்" எனும் கம்பனி இயங்காமல் இருப்பதாக அல்லது வியாபாரம் மேற்கொள்ளாமல் இருப்பதாக நியாயமான காரணங்களைக் கொண்டு நம்ப முடிகிறது.

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 394 (3) ஆம் பிரிவின் கீழ் கம்பனிகள் பதிவாளர் மா அதிபதி டயஸ் கருணாரத்ன ஹெட்டியாராச்சி ஆகிய நான், இத்திகதியிலிருந்து மூன்று மாதங்கள் முடிவடையும்போது "ஓன வெடக் (பிறைவேட்) லிமிட்டெட்" எனும் கம்பனியானது அது ஏன் கலைக்கப்படக்கூடாதென்பதற்கு தகுந்த காரணம் காட்டப்படாதவிடத்து கம்பனிகள் பதிவாளர் மா அதிபதி அலுவலகத்திலுள்ள பதிவேட்டிலிருந்து அதனது பெயர் நீக்கப்பட்டு கம்பனி மூடப்பட்டுவிடும் என்பதற்கான அறிவித்தலை இத்தால் வழங்குகிறேன்.

டி. கே. ஹெட்டியாராச்சி,
கம்பனிகள் பதிவாளர் மா அதிபதி.

பீவி 66045
கம்பனிகள் பதிவாளர் திணைக்களம்,
"சமாகம் மெதுர"
400, டீ. ஆர். விஜயவர்த்தன மாவத்தை,
கொழும்பு 10,
2010, ஓகத்து 12.

9- 101

---

## மக்கள் வங்கி - கல்கமுவ கிளை

1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்ட வாறான 1961ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி என்னும் பிரிவின் கீழான தீர்மானம்

1986 ஆம் ஆண்டின் 32ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி என்னும் பிரிவின்கீழான தீர்மானம் மக்கள் வங்கிப் பணிப்பாளர் சபையால் 2009.10.30 ஆந் திகதி நடைபெற்ற அவர்களது கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகிறது:-

"திரு. கொண்டசிங்ஹ மூலாசாரியலாகே விஜேகோன் குலசிங்ஹ, திருமதி ஏக்கநாயக்க முதியன்சேலாகே கமலாவதி என்பவர்களால் மக்கள் வங்கியின் சார்பில் குருநாகல் மாவட்ட சட்டத்தரணி பிரசித்த நொத்தாரிசு திருமதி வீரகோன் முதியன்சேலாகே நிலிகா ஹர்ஷனி வீரகோன் அவர்களால் 2008.12.23 ஆந் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 31 ஆம் இலக்க ஈட்டு முறியின் மீது வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார்கள். ஆதலால், இப்பொழுது சொல்லப்பட்ட ஈட்டு முறியின் மீது இரண்டு இலட்சத்து தொண்ணூற்று ஏழாயிரத்து தொளாயிரத்து அறுபத்தொரு ரூபா பத்தொன்பது சதம் (ரூ. 2,97,961.19) தற்போது மக்கள் வங்கிக்கு வருமதியாகவும் சேரவேண்டியும் உள்ளது. ஆதலால், இப்பொழுது சொல்லப்பட்ட இரண்டு இலட்சத்து தொண்ணூற்று ஏழாயிரத்து தொளாயிரத்து அறுபத்தொரு ரூபா பத்தொன்பது சதம் (ரூ. 2,97,961.19) அத்துடன் இரண்டு இலட்சத்து தொண்ணூற்று ஏழாயிரத்து தொளாயிரத்து அறுபத்தொரு ரூபா பத்தொன்பது சதம் (ரூ. 2,97,961.19) மீது 2009.05.19 ஆந் திகதி முதல் ஏல விற்பனை திகதி வரை ஆண்டோன்றுக்கு இருபத்து நான்கு (24%) சதவிகிதப்படி வட்டியும் ஏலவிற்பனை திகதி வரை தொடர்ந்தம் வட்டியையும் குறிப்பிட்ட மக்கள் வங்கிச் சட்டத்தின் "29D" சரத்தின் கீழ் அறவிடப்பட வேண்டிய பணம், செலவுகள் உட்பட அதன் பின்னர் கொடுப்பனவுகள் ஏதும் பெறப்பட்டிருப்பின் அவற்றைக் கழித்து ஒரே முறையில் அறவிடுவதற்காக சொல்லப்பட்ட 31 ஆம் இலக்க

முறியினால் சொல்லப்பட்ட வங்கிக்கு ஈடுவைக்கப்பட்ட ஆதனமும் வளவும் குருநாகலையைச் சேர்ந்த உத்தரவுபெற்ற ஏலதாரர் டபிள்யூ. எம். ஐ. கல்லேல்ல அவர்களால் பகிரங்க ஏலவிற்பனை செய்யப்பட வேண்டுமென மக்கள் வங்கிப் பணிப்பாளர் சபை 1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தால் அதற்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இத்தால் தீர்மானிக்கின்றது.''

**ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விவரணம்**

வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டம், வன்னி ஹத்பத்துவ, ஹதலிஸ்பஹ மேற்குக் கோரளை, எதினிவெடுனுகல என்ற கிராமத்தில் அமைந்துள்ள, அரச காணிக்கு உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் திரு. ஆர். எம். காமினி ரத்நாயக்க அவர்களால் 2008.05.28 ஆந் திகதி அளந்து தயாரிக்கப்பட்ட 134/2008 ஆம் இலக்க வரைபடத்தின் 01 ஆம் இலக்க காணித்துண்டுக்கான எல்லைகள் - வடக்கு : காணியின் எல்லையிலிருக்கும் கற்பாறை ; கிழக்கு : பொடிநோனாவின் காணி; தெற்கு : ரன்ஹாமியின் காணியும் 12 அடி அகலப்பாதையும் ; மேற்கு : ரூபசேனவினது காணி என்ற எல்லைக்குட்பட்டஇரண்டு ஏக்கர் (2ஏ. 0று. 0பே.) விஸ்தீரணமுள்ள காணியும் அதனுள் அமைந்துள்ள மரம், செடி, பழவகை, கட்டிடம் உட்பட அனைத்தும் அடங்கலாக.

மேற்கண்ட காணி கீழ்க்காணும் காணியிலிருந்து மீண்டும் அளந்து வேறாக்கப்பட்டதாகும்:-

வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டம், கல்கமுவ பிரதேச செயலாளர் பிரிவு, இல. 45, மேற்குக் கோரளை, இல. 95, எதினிவெடுனுவெவ கிராம உத்தியோகத்தர் பிரிவு, எதினிவெடுனுகல என்ற கிராமத்தில் அமைந்துள்ள அரச காணிக்கான எல்லைகள் - வடக்கு : கற்பாறை ; கிழக்கு : பொடிநோனாவின் காணி ; தெற்கு : ரன்ஹாமியின் காணி ; மேற்கு : ரூபசேனவினது காணி என்ற எல்லைகளுக்குட்பட்ட இரண்டு ஏக்கர் (2ஏ. 0று. 0பே.) விஸ்தீரணமுள்ள காணியும் அதனுள் அமைந்துள்ள மரம், செடி, பழவகை, கட்டிடம் உட்பட அனைத்தும் அடங்கலாக.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

உதவிப் பொது முகாமையாளர்,
வடமேல் வலயம்.

மக்கள் வங்கி,
வலய அலுவலகம்,
இல. 210, வெஹெர,
குருநாகல்.

8-113

**அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்குமுரிய புதிய விகிதங்கள்**
***2009 சனவரி 01 ஆந் திகதி தொடங்கி அமுலுக்கு வந்தது***
***"இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை"***
***(வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படுவது.)***

*1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் விளம்பரதாரர்களே பொறுப்பாளராவார்.*

*2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன்* ***அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8*** *அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.*

*3. அலுவலக நேரம் மு. ப. 8.30 மணி முதல் பி. ப. 4.15 மணி வரையாகும்.*

*4. பணம் கொடுக்கல் வாங்கல் மு. ப. 9.00 மணி முதல் பி. ப. 3.00 மணிவரை நடைபெறும்.*

***5. சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படுதல் வேண்டும்.*** *தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகரின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும்.*

***6. நகலைக் கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் ரைப் அடித்தல்*** *பிழைகளையும் காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும். கையெழுத்துப் பிரதி எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.*

***7. கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.***

*8. வியாபார விளம்பரங்களும் பெயர் மாற்றம் பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.*

*9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுக்கப்பட வேண்டிய விளம்பரங்கள் 'சுப்றீம் கோட்' புறொக்டரால் கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்பட மாட்டா.*

*10. அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 2010 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து பின்வருமாறு :-*

| | ரூபா | ச. |
|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய | 137 | 00 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலமும் அல்லது அதன் பகுதிக்கும் | 137 | 00 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் அரை பக்கம் | 1,300 | 00 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் | 2,300 | 00 |

*ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.*

*11.* ***வெள்ளிக்கிழமை தோறும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி*** *வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.*

***12. ஒவ்வொரு மாதமும் முதற்கிழமை வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் "அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8" அவர்கட்கு சகல அறிவித்தல்களும் விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.***

***13. 2010 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து மீளவாய்ந்த புதிய சந்தா விபரம் :-***

| இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி (வருடத்திற்கு) | முழு வருடத்திற்குமான கட்டணம் ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I வது பகுதி : | | |
| I வதுதொகுதி | 2,080.00 | 3,120.00 |
| II வது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 1,300.00 | 3,120.00 |
| III வது தொகுதி | 780.00 | 3,120.00 |
| I வது பகுதி முழுவதும் (I, II, III தொகுதிகள் உட்பட) | 4,160.00 | 6,240.00 |
| II ஆவது பகுதி | 580.00 | 3,120.00 |
| III வது பகுதி | 405.00 | 3,120.00 |
| IV வது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 890.00 | 2,400.00 |
| V வது பகுதி | 860.00 | 420.00 |
| VI வது பகுதி | 260.00 | 180.00 |
| அதிவிசேட வர்த்தமானி | 5,145.00 | 5,520.00 |

***முழு ஆண்டின் இறுதி வரைக்கும் பன்னிரண்டு மாதங்களுக்குக் குறையாத காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்படும்.***

***தனிப்பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்***

| | விலை ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I வது பகுதி : | | |
| I வது தொகுதி | 40.00 | 60.00 |
| II வது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 25.00 | 60.00 |
| III வது தொகுதி | 15.00 | 60.00 |
| I வது பகுதி (I, II, III தொகுதிகள் உட்பட) | 80.00 | 120.00 |
| II வது பகுதி | 12.00 | 60.00 |
| III வது பகுதி | 12.00 | 60.00 |
| IV வது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 23.00 | 60.00 |
| V வது பகுதி | 123.00 | 60.00 |
| VI வது பகுதி | 87.00 | 60.00 |

***இவைகளில் எவையேனும் பெற விரும்புவோர் சரியான பணத்தொகையை "அதிபர், அரசாங்க பிரசுர நிலையம், இல. 132, மாயா அவெனியு, கிருளப்பனை, கொழும்பு 5" என்ற விலாசத்திற்கு அனுப்புதல் வேண்டும். சந்தாப்பணம் ஏற்பதற்கும் தனிப்பிரதிகள் விற்பனை செய்வதற்கும் இவரே முழுப் பொறுப்பாளியாவார்.***

# வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் யாவும்* ***அரசாங்க பிரசுராலய அதிபர், இல. 132, மாயா அவெனியு, கிருளப்பனை, கொழும்பு 5*** *என்ற விலாசத்துக்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.* ***அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.***

***முக்கிய கவனிப்பு.-*** *இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும்* ***அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும்*** *என்பதையும்,* ***அரசாங்க பிரசுராலய அதிபரால் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது*** *என்பதையும் கவனத்திற் கொள்க.*

***அட்டவணை - 2010***

| மாதம் | | வெளியீட்டு நாள் | | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|---|---|
| **செத்தெம்பர்** | .. | வெள்ளி | 03.09.2010 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 20.08.2010 |
| | | வியாழன் | 09.09.2010 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 27.08.2010 |
| | | வெள்ளி | 17.09.2010 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 03.09.2010 |
| | | வெள்ளி | 24.09.2010 | .. | நண்பகல் 12 | வியாழன் | 09.09.2010 |
| **ஒற்றோபர்** | .. | வெள்ளி | 01.10.2010 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 17.09.2010 |
| | | வெள்ளி | 08.10.2010 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 24.09.2010 |
| | | வெள்ளி | 15.10.2010 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 01.10.2010 |
| | | வியாழன் | 21.10.2010 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 08.10.2010 |
| | | வெள்ளி | 29.10.2010 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 15.10.2010 |
| **நவெம்பர்** | .. | வியாழன் | 04.11.2010 | .. | நண்பகல் 12 | வியாழன் | 21.10.2010 |
| | | வெள்ளி | 12.11.2010 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 29.10.2010 |
| | | வெள்ளி | 19.11.2010 | .. | நண்பகல் 12 | வியாழன் | 04.11.2010 |
| | | வெள்ளி | 26.11.2010 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 12.11.2010 |

**லக்ஷ்மன் குணவர்தன,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2010 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.